GOKULAM

அக்டோபர் 2010 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

பார்க்கும் பூக்கள் !

தச்சன் குருவி!





நாளைய நம்பிக்கை!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1776


1777


1778


1779


1780


1781


1782


1783


1784


1785


1786


1787


1788


1789


1790


1791


1792


1793


1794


1795


1796


1797


1798


1799


1800

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

அக்டோபர் 2010 மலர் : 28 இதழ் : 9

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்



அருமைக் குழந்தைகளே,

உலகளாவிய சிந்தனை மரபில் புதிய மலர்ச்சி
யை ஏற்படுத்திய மாமனிதர் பிறந்த மாதம் இது.
'அகிம்சையும், ஒத்துழையாமையும் போருக்
ரிய புதிய ஆயுதங்களாக இருந்தாலும் ஒரு
பார் தரும் அழிவை ஏற்படுத்தாமல், அதன்
வற்றியை அடைய முடியும்' என்கிற புதிய
பாராட்ட யுத்தியை உலகுக்கு அறிமுகப்
டுத்தியவர் இவர்தான்!

அகிம்சை பிறந்த நாள்!

அது மட்டுமல்ல; துணிவு என்பது உடல் பலமும், ஆற்றலும்
மட்டும் சம்பந்தப்பட்ட விஷயமல்ல; மன வலிமையோடு தொடர்புடை
து என்பதை தமது வாழ்வின் மூலமே உணர்த்தியவரும் இவர்தான்! அதனால்தான்,
ாகிஸ்தான் பிரிவினையின்போது நடந்த கலவரத்தை அடக்க முடியாமல், அரசா
கம் தடுமாறியபோது, தனி மனிதராக அந்தப் பகுதிகளில் அவரால் பயணிக்க
டிந்தது. கலவரத்தைக் கட்டுப்படுத்த முடிந்தது. 'தனி நபர் ராணுவம்' (one man
my) என்று சொல்லத்தக்க புகழை ஏற்படுத்தியது.

அக்டோபர் இரண்டு என்பது, காந்திஜியின் பிறந்த நாள் என்பதை
னைவு கூர்வது மட்டும் போதாது. அவர் எடுத்துச் சொன்ன அகிம்
சயையும், சத்தியத்தையும், சகிப்புத் தன்மையையும் பின்பற்று
துதான் முக்கியம். இது நம் நன்மைக்காக மட்டுமல்ல;
ளைய உலகின் நன்மைக்காகவும்தான்! அதனால்தான் உலக
ளவில் இன்னும் பல தலைவர்கள் காந்தியத்தை ஆதர்சமாகக்
காண்டிருக்கிறார்கள்.



அன்புடன்
கோகு



''உங்கம்மா உன்னை ஏன் அடிச்சாங்க?''

''பொய் சொன்னா எங்கம்மாவுக்கு பிடிக்காது.''

அப்படியென்ன சொன்னே?''

''நான் நல்லா படிக்கிறேன்னுதான்!''

- மதன், திருப்பூர்




''உங்க சாப்பாட்டுல நார்ச்சத்து குறைவா இருக்கு...''


''என்ன டாக்டர் நீங்க! அதுக்காக தேங்காயை உரிச்சு நாரை மட்டும் சாப்பிட முடியுமா?

''????''

- ஆர்.செந்தில் முருகன், பெண்ணாடம்



மூழ்காதது ஏன்?



''முப்பது பேர் இருந்தும் அந்தப் படகு மூழ்கலையா? அதெப்படிச் சொல்றே?''

''நிஜம்தான் அங்கிள். ஏன்னா, படகு அப்போ கரையில இருந்தது.''

- ஜி.எஸ். ஸ்ரீமதி, கோபி



ஆசிரியர் : மனிதர்களைத் தவிர எல்லா
யிரினங்களுக்கும் கண் பார்வை அதிகமா?
தை வைச்சுச் சொல்ற?''

''மாணவன் : எந்தப் பறவையோ, விலங்கோ
ண்ணாடி போட்டுக்கலையே சார்!''

– ஜி.எஸ்.கார்த்திக், கோபி



''எங்க ஊர்க் குழந்தைகூட 'யார்
ந்திசாலி'ன்னு கேட்டா, 'ரவி'ன்னு என்
பயரைத்தான் சொல்லும்.''

''குழந்தைகளுக்கு விவரம் தெரியாதுன்னு
ங்கம்மா சொன்னது நிஜம்தான்னு தோணுது.''

– அதிபன் அன்புமணி, ஈரோடு

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!





சமீபத்தில் அகில இந்திய அளவில் தடகள போட்டிகள் ஆந்திர மாநிலம் குண்டூரில் நடந்தன அன்று நல்ல மழை. தடகளத்தை பிளாஸ்டிக் ஷீட்டுகளால் பாதுகாத்தும் பயனில்லை. ஒரே சேறும் சகதியுமாகக் காட்சியளித்த தடகளத்தைப் பார்த்த சிறுமி ரோஸலுக்கு அழுகையாக வந்தது. ''அப்பா, இதில் எப்படி ஓடி நான் சாதனை செய்ய முடியும்? எனக்கு எந்தப் பரிசும் கிடைக்கப் போவதில்லை'' என்றவாறு அப்பா ஆல்பனை கட்டிப் பிடித்துக் கொண்டாள் அப்புறம் என்ன நடந்தது? ஆல்பன் சொல்கிறார் :

''ரோஸலை அழைத்தவுடன், கண்களை துடைத்துக் கொண்டு, ஒரு புத்துணர்வுடன் தடகளத்தில் இறங்கினாள். சேற்றிலும், சகதியிலும் ஓடி வந்து, அன்று அவள் தாண்டிய தூரம் 5.09 மீட்டர். பதினான்கு வயதுக்கு உட்பட்டவர்களுக்காக நடந்த போட்டி அது. வேறு எந்தச் சிறுமியும் ரோஸல் தாண்டிய தூரத்தை முறியடிக்கவில்லை. ரோஸல் தேசிய சாம்பியனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள். ஆனால் அதற்குச் சில நாட்கள் முன் நடந்த தென் மண்டலப் போட்டிகளில் ஐந்து மீட்டர், அறுபது சென்டிமீட்டர் தாண்டி சாதனை படைத்து முதல் பரிசு வாங்கியிருக்கிறாள். பெங்களூருவில் நடந்த போட்டி அது. செயற்கை ரப்பர் (சிந்தடிக்) தடகளம். தடகளப் போட்டிகளை நடத்தும்போது, கூடிய மட்டும் சிந்தடிக் தளத்தில் நடத்த வேண்டும்.''

இப்போது, வர இருக்கும் தமிழக அனைத்துப் பள்ளிகள் தடகளப் போட்டிகளுக்கான பயிற்சியில் இருக்கிறார் ரோஸல். பிராட்வேயில் உள்ள பச்சையப்பா பள்ளி மைதானத்தில், தீவிரப் பயிற்சியில் அவரை ஈடுபடுத்திக் கொண்டிருந்த பயிற்சியாளர் நாகராஜன், ''ரோஸல் தடகள உலகத்தில் நாளைய நம்பிக்கை நட்சத்திரம்! வேண்டுமானால் பாருங்கள் இன்னமும் ஐந்தாறு வருடங்களில் சர்வதேச அளவில் சாதனை புரிவாள்,'' என்று உறுதியான குரலில் சொல்கிறார்.

ப்ரியன்

நாளைய



சென்னை பாரிமுனையில் உள்ள புனித கொலம்பன்ஸ் பள்ளியில் ஒன்பதாவது படிக்கிறார் ரோஸல். அப்பா ஆல்பன் தனியார் நிறுவனத்தில் பணியாற்றுகிறார். அம்மா ஷீலா, ரோஸல் பயிலும் பள்ளிக்கு அருகிலேயே மற்றொரு பள்ளியில் ஆசிரியை. பெரம்பூரிலிருந்து மகளுடன் காலையிலயே கிளம்பி வந்து விடுகிறார்கள் பெற்றோர். பள்ளி முடிந்ததும் மாலை ஏழு மணி வரை பயிற்சி முடித்து, ரோஸலை அழைத்துச் செல்கிறார்கள். வெளியூர், உள்ளூர்ப் போட்டிகளுக்கு ரோஸலை அம்மாவோ, அப்பாவோ லீவு போட்டு அழைத்துச் செல்கிறார்கள்.

''ஐந்தாவது வகுப்பு படிக்கும் போதிலிருந்தே அவளுக்கு தடகள விளையாட்டுகளில் ஆர்வம் அதிகம். தமிழ்நாடு ஆங்கிலோ - இந்தியப் பள்ளிகளுக்கான தடகளப் போட்டியில், நீளம் தாண்டுதலில் அப்போது சாதனை படைத்தாள். வியந்து போன நாங்கள் அவளைத் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட வைத்தோம். இதுவரை பல மாநில, தேசிய போட்டிகளில் அவள் வென்றிருக்கிறாள் என்றால், அதற்குக் காரணம் பயிற்சியாளர் டாக்டர் நாகராஜன் தான். நீளம் தாண்டுதலில் சிறப்புப் பயிற்சி எடுத்துக் கொண்டாலும், 100, 200 மீட்டர் ஓட்டம், மும்முறை தாண்டுதல் (triple ump) ஆகியவற்றிலும் முத்திரை பதித்திருக்கிறாள் ரோஸல்'' என்கிறார் அம்மா ஷீலா. பயிற்சிகளுக்காகவும் போட்டிகளுக்காகவும் பல நாள் ரோஸல்



நம்பிக்கை!

பள்ளிக்கு விடுப்பு எடுக்க வேண்டி வரு கிறது. எனவே அவரது படிப்பு விஷயத் தில் அம்மா ஷீலா மிகுந்த கவனம் செலுத்துகிறார்.

''எங்க பிரின்ஸி மாம் சகோதரி பிரபா மற்றும் விளையாட்டு ஆசிரியர் பிரேமா ஆகியோர் எனக்கு மிகுந்த ஆதரவு கொடுத்து ஊக்குவிக்கிறார்கள்,'' என்று சொல்கிறார் ரோஸல். சாதனையை



அங்கீகரிக்கும் விதமாக, பள்ளி விளை யாட்டுப் போட்டிகளில் வென்றவர் களுக்குக் கொடுத்த சான்றிதழில், ரோஸ வின் படத்தையும் அச்சிட்டுக் கொடுத் தாராம் தலைமை ஆசிரியை பிரபா.

''இது போல, பள்ளி அளவில் ஊக்கப் படுத்தினாலே எதிர்காலத்தில் சர்வதேச அளவில் சாதனை படைக்கும் விளை யாட்டு வீரர்கள் நமது நாட்டில் உருவ வதற்கு வாய்ப்பு உண்டாகும்'' என்கிறா ஷீலா.

புனித ஜோஸப் விளையாட்டு அக தமி சார்பில் நிறைய மாணவ, மாணவ களுக்கு தடகளப் பயிற்சி கொடுத் வருகிறார் டாக்டர் நாகராஜன். இப்போ, நடக்கும் காமன்வெல்த் போட்டிகளி தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண் ருக்கும் காயத்ரி கூட இவர பயிற்சியில் தயாரானவர்தான் ''எனக்கு காயத்ரிதான் ரோல்மாடல்

''எங்க பிரின்ஸி மாம் சகோதரி பிரபா, விளையாட்டு ஆசிரியர் பிரேமா ஆகியோர் எனக்கு மிகுந்த ஆதரவு கொடுத்து ஊக்குவிக்கிறார்கள்''

என்று சொல்லும் ரோஸல், நேர கிடைத்தால் காதில் இயர் ஃபோனை மாட்டிக் கொண்டு மேற்கத்திய பாடல்களைக் கேட்டுக் கொண் ருக்கிறார். போகோ, சன் மியூஸி சேனல்கள் பார்ப்பது அவரது மற்றொ பொழுதுபோக்கு. ஆல் த பெஸ் ரோஸல்!

அட்டை,படங்கள்: ஸ்ரீஹ

உங்கள் கவனத்துக்கு!

- சிறுவர் சங்க உறுப்பினராவதற்குக் குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.
- பட்டியல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை (பக்கம் 59) நிரப்பி, புகைப்படத்தை இணைத்து அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

டியர் குட்டீஸ்...



- **சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்பும்போது, அதில் புகைப்படத்தை ஒட்டி அனுப்புங்கள். புகைப்படம் இல்லாமல், அனுப்பப்படும் கூப்பன்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.**
- உறுப்பினர் சங்கத்தில் உங்கள் புகைப்படம் இடம் பெற்றுவிட்டது என்றால், அந்தப் புகைப்படத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட எண்தான் உங்களுடைய உறுப்பினர் எண். எனவே, உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், அந்த எண்ணைக் குறிப்பிட்டுத் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்!
- முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.
- இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.
- நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது உங்களுக்கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.
- **ஏற்கெனவே உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.**
- உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.
- **மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.**
- **பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.**
- நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32


ஆதி
கதை, படம்: பிள்ளை
ஊர்ந்து போறதே ரொம்பக் கஷ்டமா இருக்கு. சே! சுத்த போர்!
இறக்கை இருந்தா ஜாலியா இருக்கும்...
அட! தவம் செய்து இறக்கை கேட்போம்.
கடவுள் அருவமாக...
ஆதி! என்ன வரம் வேண்டும் உனக்கு? கேள்!
பறக்க, இறக்கை வேண்டும்.
நன்றாக யோசி, அவசரமில்லை!
நான் யோசித்த பிறகுதான் கேட்கிறேன்.
கடவுள் இறக்கை கொடுக்க...
ஆ.. சூப்பர்!
இனி நானும் சூப்பர் ஹீரோ தான்!


அதிர்ஷ்டம்டா! வீட்டைத் தேடி விருந்தே வருதே! நல்ல நாள்தான்!
ஆ... கழுகு! வழி மாறி வந்துட்டேனா?
மாட்டினேடா ஆதி! சீக்கிரம் பற! இல்லே அம்பேல்தான்!
அதோ என் வீடு! இனி பயமில்லே...
ஐயோ... உள்ளே போக முடியலை.. இறக்கை... இறக்கை..
ஆ... என் வாலை விட்டுடு! எனக்கு இறக்கை வேண்டாம்! கடவுளே...
அப்போது...
என்ன ஆதி? பகல் கனவா?
ம்... ம்... பயங்கரக் கனவு!

ச.ந. கண்ணன்



மீண்டும்

சச்சின் மீண்டும் கேப்டன் ஆகியிருக்கிறார். இந்திய விமானப் படையில் அவருக்கு க்ரூப் கேப்டன் பதவி வழங்கப்பட்டுள்ளது. இது ஒரு கௌரவப் பதவி! இந்தியாவில் முதல் தடவையாக விளையாட்டுத் துறையைச் சேர்ந்த ஒருவருக்கு இப்பதவி வழங்கப் பட்டுள்ளது. இதற்கு முன்னால், கபில் தேவுக்கு லெஃப்டினன்ட் பதவி வழங்கப்பட்டது (இது க்ரூப் கேப்டனுக்கு அடுத்த அந்தஸ்து உள்ள பதவி). 'சச்சினுக்கு இப்பதவியை அளித்ததன் விளைவாக, விமானப்படையில் அதிக இளைஞர்கள் சேர்வார்கள்' என்று விமானப்படைத் தளபதி பி.வி. நாயக் தெரிவித்தார். 'என் வாழ்வில் இது மகத்தான தருணம்' என்று சச்சினும் மிகவும் பெருமைப்படுகிறார்.

'தமிழ்நாட்டுக்கு இன்னொரு ஆனந்த் கிடைத்துவிட்டார்' என்று செஸ் ஆர்வலர்கள் மிகவும் ஆனந்தம் கொள்கிறார்கள். பாஸ்கரன் அதிபன் என்கிற 18 வயது இளைஞர், ஆனந்துக்கு அடுத்தபடியாக இளம்வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றுள்ளார். ''நான் நேஷனல் சாம்பியன் ஆனபோது விஸ்வநாதன் ஆனந்த் எனக்கு விருந்து வைத்தார். அப்போது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. அதுதான் எனக்கு மிகவும் ஊக்கமாக அமைந்தது'' என்று தமது



* காயத்ரி

சந்தோஷத்தைப் பகிர்ந்து கொள்கிறார் அதிபன். இது வரை தமிழகத்தில் இருந்து கிராண்ட் மாஸ்டர் அந்தஸ்து பெற்றவர்கள் : விஸ்வநாதன் ஆனந்த், கிருஷ்ணன் சசிகிரண், அருண் பிரசாத், மகேஷ் சந்திரன், ஆர்.ஆர். லக்ஷ்மண், தீபன் சக்கரவர்த்தி, ஆர்.பி.ரமேஷ், எஸ்.ஆர். கிடாம்பி இப்போது, பாஸ்கரன் அதிபன்.

விளையாட்டு

* பாஸ்கரன் அதிபன்



கேப்டன்!

2010 காமன்வெல்த் போட்டியில் தங்கம் வெல்பவர்களுக்கு ரூ.20 லட்சமும், வெள்ளிப் பதக்கம் வென்றால் ரூ.10 லட்சமும், வெண்கலப் பதக்கம் வென்றால் ரூ.6 லட்சமும் பரிசாக வழங்கப்படுகிறது. இதுவரை வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகையை விட இது இருமடங்கு. இந்த காமன்வெல்த் போட்டியில் அத்லெடிக் பிரிவில் டிண்டு லுகாவும், காயத்ரியும் தங்கம் வெல்வார்கள் என்று மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது.


* டிண்டு லுகா



2011 கிரிக்கெட் உலகக்கோப்பை இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடக்க உள்ளது. இந்தியாவில் டெல்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு, சென்னை உள்பட எட்டு நகரங்களில் இதன் ஆட்டங்கள் நடைபெற உள்ளன. இந்த எட்டு மைதானங்களும் உலகக்கோப்பைக்காகப் புதுப்பிக்கப்பட்டுள்ளன.



கோவில் ஒன்றின் கருவறையில்
கொலுவீற் றிருந்த சிலைபார்த்து
வாயில் படியும் ஒருசமயம்
வருத்தம் கொண்டு பேசியது!



''நீயும் நானும் ஒன்றாக
நெடிய மலையின் பாறைகளாய்
காயும் வெயிலில் காய்ந்திருந்தோம்
காலக் கொடுமை பார்த்தாயா?

இங்கே வருவோர் எல்லோரும்
இருகை கூப்பி உன்னையுமே
வணங்கித் தொழுது போகின்றார்
வாசலில் நானோ கிடக்கின்றேன!

என்னை யாரும் தொழுவதில்லை!
எனக்கு அதிலே வருத்தமில்லை!
மண்ணுக் காலால் என்மார்பில்
மிதிப்பது மட்டும் பொறுக்கவில்லை!

என்ன பாவம் செய்தேன்நான்?
ஏனோ நமக்குள் பேதங்கள்?
உன்னை உயர்த்தும் உள்ளத்தார்
ஒதுக்குதல் என்னை எதற்காக?''

என்று படிக்கல் கேட்டதற்கு
இரக்கம் கொண்டு சாமிசிலை,
''நன்று நண்பா உன்வருத்தம்
நியாயம்; நானும் உணர்கின்றேன்!

சிலையைச் செய்யும் நோக்கத்தில்
சிற்பி நம்மைச் சோதிக்க
உளியை எடுத்து உன்மீது
ஓங்கி யடித்தான் உக்கிரமாய்!

படி கற்ற

நீயோ தாங்கும் வலுவின்றி
நீள வாக்கில் இரண்டானாய்!
நானோ என்னை அவனடித்தும்
நெஞ்சுரம் கொண்டு பொறுத்திருந்தேன்!


'பொறுத்தார் பூமி ஆள்வார்கள்!'
பொறுமை எனக்கு வெகுமதியாய்
போற்றும் சிலையாய் ஆக்கியது!
போற்றித் துதிக்க மாற்றியது!

மனிதரில் மேலோர் சிலபேர்கள்
மனதில் இரக்கம் இருப்பதனால்
கோயில் படியாம் உன்னையுமே
கண்களில் ஒற்றித் துதிக்கின்றார்!


பொறுமை யற்றுப் போவோர்க்குப்
பூமியில் வெற்றி கிடைக்காது!
புரிந்து கொண்டால் வாழ்க்கையிலே
புகழும் சேரும்'' என்றதுவாம்!

''உண்மை நண்பா உன்வார்த்தை!
உணர்ந்தேன்'' என்றே கைகூப்பி
கண்கள் பனிக்க வணங்கியதாம்
கடவுளின் அடிகளைப் பார்த்து படி!

வளர்கவி



பாடம்!



டாக்டர் கு. கணேசன்

அழுத்தநோய், விழித்திரை நோய், சர்க்கரை நோய், கண்நரம்பு நோய், கிட்டப்பார்வை, தூரப்பார்வை என்று நீண்ட பட்டியலே போடலாம். என்றாலும், இவற்றில் கிட்டப்பார்வை, தூரப்பார்வை என்று அழைக்கப்படுகின்ற

கண்களைக்

நம் உடலிலுள்ள ஐம்புலன்களில் கண்கள் மிகவும் முக்கியமானவை. அதனால்தான், 'ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா!' என்று பாடினார் மகாகவி பாரதி. சிறு வயதிலிருந்தே ஊட்டச்சத்துள்ள உணவு களை உண்டுவந்தால் கண்பார்வை மிகச் சரியாக இருக்கும். இன்றைய குழந்தைகள் ஊட்டச்சத்துகளுக்கு இடம் தராமல், 'விரைவு உணவு'களை அதிகமாக விரும்பிச்சாப்பிடுவதால், - கண்ணுக்குத் தேவையான சத்துகள் கிடைக்காமல் பார்வைக் குறை ஏற்பட்டு, சிறுவயதிலேயே கண்ணாடி அணியும் நிலை ஏற்படுகிறது.

பார்வை குறையக் காரணங்கள்

பார்வை குறைய பல காரணங்கள் உண்டு. கருவிழி நோய், கண்புரை நோய், கண் பார்வைக் குறைபாடுகள்தான் குழந்தைகளுக்கு அதிகமாக ஏற்படுகின்றன. கிட்டப்பார்வை உள்ளவர்களுக்கு, அருகில் உள்ள பொருள்கள் தெரியும். தூரத்தில் உள்ள பொருள்கள் சரியாகத் தெரியாது. தூரப்பார்வை உள்ளவர்களுக்குத் தூரத்தில் உள்ள பொருள்கள் தெரியும். அருகிலுள்ள பொருள்கள் சரியாகத் தெரியாது.

மாலைக்கண் நோய்

சிலருக்குப் பகலில் பார்வை நன்றாகத் தெரியும். மாலை நேரத்தில் பார்வை குறையத் தொடங்கும். இரவில் சரியாகத் தெரியாது. இதற்கு மாலைக்கண் நோய் என்று பெயர். இந்த நோய் வைட்டமின் ஏ சத்துக் குறைவு காரணமாக வருகிறது. திட்டமிட்ட உணவும் சமச்சீரான உணவும் உட்கொள்ளாத

குழந்தைகளுக்கு இந்த நோய் அதிக அளவில் ஏற்படுகிறது.

கண்ணைக் காக்கும் வைட்டமின்


காலம் முழுவதும் கண்பார்வை பளிச் சென்று இருக்க வைட்டமின் ஏ மற்றும் கரோட்டின் சத்து மிக அவசியம். கண்ணின் வெளியில் தெரிகின்ற வெண்படலம், கரு விழி ஆகியவற்றில் உள்ள திசுக்களின் சீரான வளர்ச்சிக்கு வைட்டமின் ஏ சத்து தேவை. மேலும், நமக்குப் பார்வை சரியாக இருக்க வேண்டுமென்றால் கண்ணின் உள்ளே விழி லென்ஸுக்குப் பின்புறம் உள்ள விழித்திரை ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த. விழித்திரையில்தான் நாம் பார்க்கும் பொருளின் பிம்பங்கள் விழுகின்றன.இந்தப் பிம்பத்தைப் பற்றிய செய்திகள் கண் நரம்பு வழியாக மூளைக்குச் செல்கின்றன. மூளை இதனைப் பார்வையாக உணர்த்துகிறது. விழித்திரையில் 'ராட்கள்' மற்றும் 'கோன்கள்' என்னும் அணுக்கள் உள்ளன. கண்ணுக்குள் ஒளிக்கீற்றாக நுழைகின்ற பொருள்களைப் பிம்பங்களாக உரு வாக்கிப் பார் வையை உண்டாக் குவதும், பார்க்கின்ற பொருள்களின் நிறங்களைப் பகுத்துச் சொல்வதும் இவற்றின் வேலை. 'ராட்கள்' மற்றும் 'கோன்கள்' சரியாகச் செயல்படுவதற்கு வைட்டமின் ஏ உதவுகிறது. ஆகையால் உடலில் வைட் டமின் ஏ சத்து சரியான அளவில் இருந்தால் பார்வை நன்றாக இருக்கும்.



வைட்டமின் ஏ உணவுகள்

காரட், முட்டைக்கோஸ், புடலைக்காய், பீர்க்கங்காய், முருங்கைக்காய், அவரை, பீன்ஸ், பூசணி ஆகிய காய்கள்; பப்பாளி, தக்காளி, மாம்பழம், ஆப்பிள், அன்னாசி, மாதுளை, கொய்யா, உலர் திராட்சை போன்ற பழங்கள்; பால், முட்டை, இறைச்சி, வெண்ணெய், மீன், மீன் எண்ணெய் போன்ற அசைவ உணவுகள்; முளை கட்டிய தானியங்கள் போன்றவற்றில் வைட்டமின்

காக்கும் உணவுகள்!



ஏ சத்து அதிகம்.

பார்வை தரும் கீரைகள்

முருங்கைக்கீரை, பொன்னாங் கன்னிக்கீரை, மணத்தக்காளிக்கீரை, சிறு கீரை, கறிவேப்பிலை, கொத்துமல்லி, புதினா போன்றவற்றிலும் இச்சத்து அதிகம். தினமும் ஒரு கீரை சாப்பிடுவது கண்களைப் பேணும்

தினசரி உணவுத் திட்டம்

காலையில் காபிக்குப் பதிலாக ஆப் பிள், அன்னாசி, பேரீச்சை இவற்றில் ஒன்

றைச் சாறு பிழிந்து 200 மி.லி. அருந்தலாம். காலை உணவில் இட்லி, தோசைக்குப் புதினா சட்னி, கொத்துமல்லி துவையல் சேர்க்கலாம்.

மதிய உணவில் காய்கறிகளில் ஒன்றையும் கீரைகளில் ஒன்றையும் அவசியம் சேர்த்துக் கொள்ள வேண்டும். மாலை சிற்றுண்டியில் காரட் பால், பப்பாளிச் சாறு, காய்கறி சாலட் அல்லது காய்கறி சூப் 200 மி.லி. அருந்தலாம்.

இரவில் வழக்கமான உணவுடன் இரண்டு பச்சை காரட், மீன் எண்ணெய் ஐந்து மில்லி அல்லது மீன் எண்ணெய் மாத்திரை ஒன்று சாப்பிடலாம்.

சத்துக்குறைவு அறிவது எப்படி?

பொதுவாக கண்ணின் வெளியில் தெரிகின்ற வெண்படலம் வெள்ளை நிறத்தில் காணப்படும். அது ஈரமாக இருக்கும். வைட்டமின் ஏ குறைவாக இருந்தால், வெண்படலத்தின் பளபளப்பு குறையும். கலங்கிய நிறத்தில் காணப்படும். பின்னர், அதில் வெள்ளிநிறப் புள்ளிகள் தெரியும். கண்ணீர் சுரப்பது குறையும். இதனால் ஈரம் குறைந்து கண்கள் உலர்ந்துவிடும். இந்த நிலைமையில் சிகிச்சை பெற்று சரி செய்துவிடலாம். தவறினால், வெள்ளிநிறப் புள்ளிகள் தடித்துத் தழும்பாகிவிடும். அப்போது பார்வை குறைந்துவிடும். முக்கியமாக இரவில் பார்வை தெரியாது.

கண்ணுக்குப் பயிற்சி செய்!

தவிர, கண் தசைகளுக்குப் பயிற்சியும் தேவை. நடனமாடுபவர்கள், கண்ணை மட்டும் பல திசைகளில் உருட்டுவார்கள். அது போல, முகத்தை நேராக வைத்துக் கொண்டு, கண்களை மட்டும் இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும், மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும், பின்பு வட்டவடிவிலும் உருட்டுங்கள். தினமும் இப்படி ஐந்து நிமிடங்கள் பயிற்சி செய்யுங்கள். பார்வை தெளிவாக இருக்கும்.

திருத்தம்: கடந்த இதழில் 'சக்தி தரும் உணவுகள்' கட்டுரையில் எலும்பு மஜ்ஜையில் உருவாகின்ற W உயிரணுக்களுக்கு நோய்க்கிருமிகளை அழிக்கின்ற திறனுண்டு என்று வந்துள்ளது. அது தவறு. B உயிரணுக்களுக்கு என்று வந்திருக்க வேண்டும்.

(ஆர்.)

வாழ்த்துகள்!



பெயரைச் சொல்; பரிசை வெல்-5-ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை, குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :1. ஸ்டோட் எர்மைன் 2. பாக்ஸ் ஜெல்லி மீன் 3. பகோடா

பரிசு பெறுவோர் : 1. க.பிருந்தா, பொள்ளாச்சி 2. டி. ஜெகதீஷ், மூலக்கல் 3. கே.டி. நரேந்திரன், திருச்செங்கோடு, 4. எஸ். மருதநாதன், நெடும்பலம் 5. அ. ரெஜிரா தேம்பாவன், கோவில்பட்டி, 6. சீ. ந. லோஷிகா, ஆரணி 7. ஜே. இருதய ஜேக்கப் பர்னாந்து, ஆலந்தலை 8. டி.ஜி. செல்வன், மும்பை 9. எஸ். கே. ஸ்ரீவித்யா, நெய்வேலி 10.டி. ஜோஷிகா, காஞ்சிபுரம்

தேடி வரும் கோகுலம் ; படிக்கப் படிக்க



குதூகலம்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்கவேண்டும். உள்ளூர்க் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032.

மத்திய மற்றும் வட அமெரிக்கப் பகுதிகளை தாயகமாகக் கொண்ட தாவரம் சூரியகாந்தி. இது சூரியனைப் பார்த்த படியே இருக்கும் என்று நமக்குத் தெரியும். அதனால்தான் சூரியகாந்தி என்ற பெயரும் இதற்கு உண்டானது. ஆனால், இதன் எல்லா வகைகளுமே அப்படிப்பட்டதல்ல என்பது ஆச்சரியமான விஷயம். ஹெலியாந்தஸ் (heliyanthus) என்னும் இனத்தைச் சேர்ந்தது இந்த சூரியகாந்தி.

இவற்றில் அதிகமாகக் காணப்படும் இனம் ஹெலியாந்தஸ் அன்னஸ் (helian thus annuus). இது, 3.6 மீட்டர் (12 அடி) உயரம் வரை வளரக்கூடியது. இதன் மலர்

பார்க்கும் பூக்கள்!







கள் பெரிதாக இருக்கும். ஊதா மற்றும் பழுப்பு நிற நடுப்பகுதிகளைச் சுற்றி மஞ்சள் நிறக் கதிர்கள் அமைந்திருக்கும். இதன் இலைகள் சற்றே நீள்வட்டமாக அமைந்திருக்கும். ஒருவகைக் களைச் செடி என்று கருதப்படுகின்ற சூரிய காந்தி, இன்று பணப்பயிராக விளங்கு கிறது. இதன் விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் உணவில் மட்டுமின்றி பல்வேறு தொழிற்கூடங் களிலும் பயன்படுத்தப்படுகிறது. எஞ்சிய பகுதியை கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்துகிறார்கள்.

இதில், குறிப்பிடத்தக்க மற்றொரு வகை காட்டு சூரியகாந்தி. இதன் தாவர வியல் பெயர் ஹெலியாந்தஸ் ஜிஜா ண்டியஸ் (helianthus giganteus). இதன் இலைகள் ஈட்டியைப் போல கூர்மையாக அமைந்திருக்கும். ஏழு முதல் பதினேழு செ.மீ. நீளம் கொண்டதாக இருக்கும். மஞ்சள் வண்ண நடுப்பகுதியைச் சுற்றி வெளிர் மஞ்சள் நிறத்தில் இதழ்கள் காணப்படும். இவை, அமெரிக்காவின் கிழக்குப்பகுதி மற்றும் கனடாவின் தென்கிழக்குப் பகுதியைத் தாயக மாகக் கொண்டவை.

இவற்றைத் தவிர, பெருமளவில் பயிரிடப்படும் மற்றொரு வகை, ஜெருசலேம் ஆர்டிசோக் (jerusalem artichoke). இதன் தாவரவியல் பெயர் ஹெலியாந்தஸ் டியூ பெரோசஸ் (heliyanthus tuberosus). இந்தத் தாவரத்தின் வேர்ப்பகுதி உண் ணத் தகுந்தது என்று சொல்கிறார்கள். பொதுவாக, பூக்களைப் பார்த்து நாம் மகிழ்வோம். ஆனால், சூரியனைப் பார்த்தபடியே தன் தலையைத் திருப்பிக் கொள்கின்ற சூரியகாந்தியை, பார்க்கும் பூ என்றால் பிழையில்லைதானே?

-பி.சௌமியா,
பதினொராம் வகுப்பு,
அரசினர் மகளிர்
மேல்நிலைப்பள்ளி
காஞ்சிபுரம்.





எல்லோரும்தான் பேசுகிறோம். ஆனால், நிமிடத்துக்கு 638 வார்த்தைகளைப் பேசுகிறார் ஒருவர். குறிப்பாகச் சொன்னால், 56.2 வினாடிகளில், 595 வார்த்தைகளைப் பேசுகிறார்! அதை ஒரு நிமிடத்துக்கு என்று கணக்கிட்டு 638 வார்த்தைகள் என்கிறார்கள். இப்படிப் பேசுபவர் பிரிட்டிஷ்காரரான ஸ்டீவ் உட்மோர் (Steve Woodmore). அதற்காக, இவ்வளவு வேகமாகப் பேசினால், கேட்பவருக்கு ஏதாவது புரியுமா என்று கேட்கக் கூடாது. ரொம்பத் தப்பு!



✦ ஜான் எஃப் கென்னடி

நிமிடத்துக்கு 638 வார்த்தை!



✦ ஸ்டீவ் உட்மோர்

ஒன்பது லட்சம் டாலர்!

வெள்ளை மாளிகை என்றவுடன் அமெரிக்க அதிபர் வசிக்கும் மாளிகை என்று அனைவருக்கும் தெரியும். இது பதினெட்டு ஏக்கர் பரப்பளவில் அமைந்திருக்கிறது. விமானங்களின் குண்டு வீச்சாலும் பாதிப்படையாத அளவுக்கு, பாதுகாப்பான நிலவறையும் இந்த மாளிகையில் உண்டு. அந்த அறைச் சுவரின் கனம் ஒன்பது அடி. அதற்கு, இரட்டை வரிசை கொண்ட எஃகு இரும்பாலான கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்பது லட்சம் டாலர் செலவில் கட்டப்பட்டது இந்த வெள்ளை மாளிகை!



✦ நியூட்டன்

31 முறை தப்பியவர்!

எதிரிகளின் தாக்குதலை எதிர்பார்த்தே ஒருவர் வாழ முடியுமா? அப்படி வாழ்பவர் பொது இடங்களில் நடமாடத்தான் முடியுமா? அப்படி வாழ்ந்தவர், பதினொரு ஆண்டுகள் பிரெஞ்ச் அதிபராக விளங்கிய சார்லஸ் டி கால் (Charles de gaulle). இருபத்திரண்டு



✡ சார்லஸ் டி கால்



ஆண்டுகள், எதிரிகளின் தாக்குதலில் இருந்து தப்புவதே இவருக்கு பெரும் சவாலாக இருந்தது. இந்தக் கால கட்டத்தில், முப்பத்தொரு முறை, இவர்மீது கொலை முயற்சித் தாக்குதல்கள் மேற் கொள்ளப் பட்டன என்பது குறிப்பிடத் தக்கது. ஆனாலும், மனிதர் அசரவேயில்லை என்பது தான் சிறப்பு!

தலைமுடியின் விலை 495 பவுண்ட்!

அமெரிக்க அதிபராக விளங்கிய கென்னடிக்கு முடி திருத்தியவர் ஹேரி ஜெல்பெர்ட். இவர் 1963ஆம் வருடம் ஜூன் மாதம் கென்னடிக்கு முடி திருத்தினார். அப்போது, கென்னடியின் தலைமுடி ஒன்றை எடுத்து பத்திரப் படுத்தினார். இது நடந்த நான்கு மாதங்களில் கென்னடி சுட்டுக் கொல்லப் பட்டார். இது நடந்து, 37 ஆண்டுகள் கடந்து போய் விட்டன. கடந்த 2000 ஆண்டில், தாம் எடுத்து வைத்திருந்த கென்னடியின் தலைமுடியை ஏலம் விட்டார் ஹேரி. அது அவருக்கு, 495 பவுண்ட்களைப் பெற்றுத் தந்திருக்கிறது.



✦ வெள்ளை மாளிகை

நோய் தந்த பரிசு!

லண்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நியூட்டன் படித்துக் கொண்டிருந்த சமயம். அப்போது, பிளேக் நோய் பரவ ஆரம்பித்தது. பத்துக்கு ஏழு பேர் என்கிற கணக்கில் அதற்குப் பலியாகிக் கொண்டிருந்தார்கள்! எனவே, கேம்பிரிட்ஜ் மூடப்பட்டது. நியூட்டன் தம் தாயாரின் பண்ணை வீட்டுக்கு வந்து தங்க வேண்டிய கட்டாயம் இதனால்தான் ஏற்பட்டது. இதிலென்ன விஷயம் என்கிறீர்களா? அந்தப் பண்ணை வீட்டின் தோட்டத்தில் அமர்ந்திருந்தபோதுதான், ஆப்பிள் விழுந்ததும் அதைத் தொடர்ந்து அவர் புவியீர்ப்பு விசை பற்றி ஆராய முற்பட்டதும்! பிளேக் கொடுத்த புகழ்!

– எம். சுவாமிநாதன்,
பத்தாம் வகுப்பு, வித்யாலய
உயர்நிலைப்பள்ளி, கோவை.



கைதியின்

டண் ... டண் ... டண் ... டண்டணாடண் ...

அந்தச் சிறைச்சாலையின் காவலர்கள் ஒவ்வோர் அறையின் கம்பிகளிலும் லத்தியால் தட்டிப் புதுவிதமான சுப்ரபாதம் இசைத்தார்கள். ''பொழுது விடிஞ்சாச்சு. இன்னும் என்ன தூக்கம்? எல்லாரும் சட்டுபுட்டுன்னு எழுந்திருங்க! பல் தேய்க்கப் போங்க''

தூங்கிக் கொண்டிருந்த கைதிகள் மெல்ல எழுந்து சோம்பல் முறித்தார்கள். 'பல் தேய்ப்பதா?' அதை நினைத்தாலே வில்லியம் அட்டிஸுக்குக் கடுப்பாக இருந்தது.

வில்லியம் அட்டிஸ் ஒரு பிரிட்டிஷ் வியாபாரி. ஏதோ கைகலப்பு வழக்கில் சிக்கி ஜெயிலுக்கு வந்திருந்தார். வெளியே இருந்தவரையில் தினமும் நாலு பேரைச் சந்திப்பது, அவர்களிடம் நைச்சியமாகப் பேசித் தன்னிடம் உள்ள பொருள்களை விற்பனை செய்வது, லாபம் சம்பாதிப்பது என்று மிகவும் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்த வில்லியமுக்கு இந்த ஜெயில் வாழ்க்கை போரடித்தது.

அந்தக் காலத்தில் பல் தேய்ப்பதற்கு சிலர் ஆலங்குச்சி, வேலங்குச்சியை உடைத்து வாயில் போட்டு மென்று தேய்ப்பார்கள். இன்னும் சிலர் கரித்தூள் அல்லது உப்பைக் கொண்டு தேய்த்துப் பற்களை சுத்தப்படுத்துவார்கள். சிறைக்குள் உள்ளவர்கள் இன்னும் மோசம். பெரும்பாலானோர் பல்லே தேய்க்க மாட்டார்கள். இதனால் ஜெயில் கைதிகள் பெரும்பாலானோரின் பற்களில் அழுக்கும் கறையும் படிந்திருந்தது. பலருக்குக் கடுமையான பல் வலி வந்து அவதிப் பட்டார்கள்.

அப்போதுதான் வில்லியம் மற்ற கைதிகளுடைய பல் தேய்த்தல் படலத்தை நேரில் கண்டார். அதைப் பார்க்கப் பார்க்க அவருக்குச் சிரிப்புதான் வந்தது.

கைதிகள் தங்களுக்குக் கிடைக்கும் ஏதோ ஒரு கிழிசல் துணியில் உப்பையும் கரித்தூளையும் தொட்டுக்கொண்டார்கள். பின்னர் அதை வைத்துப் பற்களைச் சுத்தப்படுத்தினார்கள்.

வில்லியம் இதையெல்லாம் கவனித்தார். இந்தப் பிரச்னையை எப்படித் தீர்க்கலாம் என்று பலவிதமாகச் சிந்தித்துப் பார்த்தார்.

ஒருநாள் இரவு நேரம். சிறையில்





கண்டுபிடிப்பு!

என். சொக்கன்

எல்லாக் கைதிகளுக்கும் மாமிச உணவு பரிமாறினார்கள். அனைவரும் சாப்பிட்டுவிட்டுக் கை கழுவ எழுந்தார்கள்.

அப்போது வில்லியமுடைய தட்டின் அருகே ஒரு நீண்ட எலும்பு கிடந்தது. அவர்தான் மாமிசத்தைச் சாப்பிட்டுவிட்டு எலும்பைக் கீழே போட்டிருந்தார். அதைப் பார்த்தவுடன் அவருக்கு ஒரு யோசனை. இந்த எலும்பை வைத்துப் பல் தேய்க்கமுடியுமா?

'ம்ஹூம். சாத்தியமில்லை. எலும்பின் முனை கரடுமுரடாக இருக்கிறதே!' யோசனையோடு எழுந்தார். கை கழுவும் இடத்தில் அந்த எலும்பையும் சுத்தப்படுத்திப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டார்.

அடுத்த சில நாள்களுக்கு வில்லியம் எந்நேரமும் அந்த எலும்பைதான் கவனித்துக்கொண்டிருந்தார். அதைப் பல் தேய்க்கப் பயன்படுத்த வேண்டுமென்றால், என்னமாதிரி மாற்றங்களைச் செய்யவேண்டும் என்று சிந்தித்துப் பல முடிவுகளுக்கு வந்திருந்தார் அவர்.

வில்லியம் கனவு கண்ட 'பல் தேய்க்கும் கருவி'யில் எலும்பு என்பது வெறும் கைப்பிடிதான். அதன் முனையில் மென்மையான, பற்களை எளிதில் தூய்மைப்படுத்தக்கூடிய ஒரு பொருளை ஒட்டவைக்கவேண்டும். அதுதான் அவருடைய திட்டம்.

அடுத்த நாள் வில்லியம் தன்னுடைய சிறைக் காவலர் ஒருவரிடம் பேசினார். ''எனக்குக் குதிரையோட கழுத்தில இருக்கிற மென்மையான முடி கொஞ்சம் வேணும். கிடைக்குமா?''

''குதிரை முடியா? அது எதுக்கு?''

''காரணமெல்லாம் சொல்லமுடியாது,'' என்றார் வில்லியம். ''குதிரை முடி வேணும். ஏற்பாடு செய்யமுடியுமா? முடியாதா?''

காவலர் யோசித்தார், ''முயற்சி பண்றேன். ஆனா பதிலுக்கு நீ எனக்கு என்ன தருவே?''

''நீங்க எதைக் கேட்டாலும் தர்றேன்!''

மறுநாள் வில்லியம்

கேட்டபடி குதிரை முடி வந்து சேர்ந்தது. அதைச் சிறிய கொத்து களாகப் பிரித்து எல்லாம் ஒரே உயரத்தில் இருக்குமாறு வெட்டி எடுத்துக் கொண்டார்.

ஏற்கெனவே சுத்தப்படுத்தி வைத்திருந்த எலும்பை வெளியில் எடுத்தார். அதன் நுனியில் மிகச் சிறிய ஓட்டைகளைப் போட்டார். அவற்றில் இந்த ரோமக் கற்றைகளைக் கவனமாகப் பொருத்தி ஒட்டினார். வெய்யிலில் நன்கு காயவைத்தார்.

சில மணி நேரங்களுக்குள் உலகின் முதல் 'டூத் ப்ரஷ்' தயாராகி



✱ வில்லியம் அட்டிஸ்

விட்டது! இப்போது, கண்ட அழுக்குத் துணியையும் நம்பாமல் எலும்புக் கைப்பிடியைப் பற்றிக் கொண்டே வில்லியம் சுலபமாகத் தன்னுடைய பற்களைச் சுத்தப்படுத்திக் கொள்ள முடிந்தது.

மற்ற கைதிகள் இதைப் பார்த்து ஆச்சயப்பட்டார்கள். "இதுமாதிரி எங்களுக்கும் ஒண்ணு வேணும். செஞ்சு தருவியா?" என்று கெஞ்சினார்கள்.

வில்லியம் விஞ்ஞானி அல்ல; வியாபாரி. டூத் ப்ரஷ்ஷைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அவர் திட்டம் போட்டு உழைக்கவில்லை. அவருக்கு ஒரு தேவை இருந்தது. அதைத் தீர்த்துக் கொள்வதற்காக எதையோ முயன்று பார்த்தார். க்ளிக் ஆகிவிட்டது. அவ்வளவுதான்.

ஆனால் இப்போது எல்லோருக்கும் அந்த டூத் ப்ரஷ் பயன்படுவதைப் பார்த்தவுடன் வில்லியமுக்குள் இருந்த வியாபாரி விழித்துக்கொண்டார். அவர் சிறையிலிருந்து வெளியே வந்தவுடன் ஒரு புதிய நிறுவனத்தைத் தொடங்கினார். எலும்புக் கைப்பிடிகளைக் கொண்ட டூத் ப்ரஷ்களைப் பெரும் எண்ணிக்கையில் உற்பத்தி செய்து விற்க ஆரம்பித்தார்.

இங்கிலாந்து மக்களுக்கு இந்தப் புதிய கண்டுபிடிப்பு மிகவும் பிடித்துப் போய்விட்டது.

அவர்கள் வில்லியம் அட்டிஸின் தயாரிப்புகளை வாங்கிக் குவிக்க, மிக விரைவில் அவர் பெரிய பணக்காரராகிவிட்டார்.


சிறையில் அவர் கண்டுபிடித்த அதே 'டூத் ப்ரஷ்'தான் இப்போதும் உலகம் முழுக்கப் பல கோடி மக்களால் பயன்படுத்தப்படுகிறது. எலும்புக்குப் பதில் பிளாஸ்டிக் கைப்பிடி. குதிரை முடிக்குப் பதில் மென்மையான செயற்கை இழைகள். மற்றபடி அடிப்படை வடிவமைப்பு ஒன்றுதான்!


"தேவைதான் கண்டுபிடிப்புகளின் தாய்" என்று ஒரு பிரபலமான ஆங்கிலப் பழமொழி உண்டு. அவசியமும் ஆர்வமும் சேர்ந்துவிட்டால் சிறைக்கைதிகூடக் கண்டுபிடிப்பாளராகலாம்; சரித்திரத்தில் இடம்பிடிக்கலாம்!

●

கோகுலம் டைஜஸ்ட்

இந்த டைஜஸ்டில்...






அன்னப் பறவைகளைப் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். இலக்கியங்களில் நளனுக்கும் தமயந்திக்கும் தூது போனது, சரஸ்வதியின் வாகனம்... என்று அன்னத்தைப் பற்றியும், பாலில் இருந்து நீரைப் பிரித்து அருந்தும் சிறப்பு பற்றியும் சொன்னார். அப்படிப் பட்ட அன்னங்களின் இனம் அழிந்து போய்விட்டது என்றும் குறிப்பிட்டார். அவர் சொன்னதைக் கவனிக்காமல் பேசிக் கொண்டிருந்தான் ஒரு மாணவன். அவனை எழுப்பி, 'அந்த இனம் அழிந்ததற்குக் காரணம் என்ன?' என்றார். சட்டென்று சுதாரித்த அவன் சொன்னான்: 'பால்காரங்கதான் சார்.' ஆசிரியர் உட்பட அனைவருக்குமே ஆச்சர்யம் மேலிட்டது.

தொடர்ந்து விளக்கினான் அவன். 'ஏன்னா, அன்னப் பறவை இருந்தா, தாங்க விக்கற பாலில் கலந்திருக்கிற தண்ணீரைக் கண்டுபிடிச்சு சொல்லிடும்னு, அவங்கதான் அந்த இனமே இல்லாம அழிச்சுட்டாங்க.' அதைக் கேட்டு அனைவருக்குமே அடக்கமுடியாத சிரிப்பு!

ஆசிரியர் சிரித்துவிட்டுச் சொன்னார்: 'பலே, கவனிக்காவிட்டாலும் சாதுர்யமான பதில்!' அந்த மாணவன் வெட்கமாய்ப் புன்னகைத்தான்.

- ஜி. எஸ். சபரி, உ. எண். 1475, கோபி



பள்ளிக்கு நேரமாகி விட்டது. அவசர அவசரமாகக் கீழிறங்கினோம். இரண்டாவது மாடியில் இருந்து கீழே வந்தபின் என் அக்கா சொன்னாள்: 'டேய், பெல்ட் போட்டுக்கலையா?'

அவசரத்தில் பெல்ட் போடாமல்

கிளம்பி வந்துவிட்டதை அப்போதுதான் கவனித்தேன். எனவே, மாடியை நோக்கி 'அம்மா, பெல்ட் போடு' என்று சத்தமாகக் கூவினேன். அம்மாவுக்கு கேட்காததால், திரும்பத் திரும்பச் சத்தம் போட்டதைக் கேட்ட என் அப்பா சிரித்தபடியே சொன்னார்: 'டேய், நீ போட வேண்டிய பெல்டை அம்மா எப்படிடா போட முடியும்? அதான் போட முடியாம தவிக்கிறா போல இருக்கு.' டென்ஷனான அந்த நேரத்திலும், அப்பாவின் நகைச்சுவை எங்களைச் சிரிக்கவைத்தது.



நண்பர்கள் நான்கு பேர் ஒரு பேக்கரியில் சாப்பிட உட்கார்ந்தோம். அங்கே பெரிதாக இருந்த ஒரு கேக்கை நான்காக வெட்டித் தரச் சொன்னோம். நாங்கள் பேசிக் கொண்டிருந்த சமயத்தில், எங்கள் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் இன்னும் நான்கு பேர் வந்தனர். இன்னொரு கேக் வாங்கலாம் என்றால், பையில் பணம் போதாது. எனவே, அந்தக் கேக்கை எட்டுத் துண்டுகளாகப் போடச் சொல்ல நினைத்தோம். அதை என்



பால்காரங்க தான்!

நண்பன் சொன்னான்: 'சார், நாலு இல்லை; எட்டுப் போடுங்க. எட்டுப் போடுங்க'. அதைக் கேட்ட கடைக்காரர் சிரித்தபடியே சொன்னார்: 'தம்பி, ஏற்கெனவே எட்டுப் போட்டு நான் டிரைவிங் லைசென்ஸ் வாங்கிட்டேன்.' அவர் சொன்ன டைமிங் ஜோக் அனைவரையும் சிரிக்க வைத்தது.


– பா. சூர்ய நாராயணன்,
பிரின்ஸ் மேல்நிலைப்பள்ளி
சென்னை-91

பெரிய கோயில் என்றதும் தஞ்சாவூரும், செங்கோட்டை என்றதும் டெல்லியும் நினைவுக்கு வருவது போலவே, சி என் டவர் (C N Tower) என்றதும் நினைவுக்கு வருவது கனடா. சி என் டவர் என்பது Canadian National Tower என்பதன் சுருக்கம். டொரன்டோ நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கோபுரம் 1976 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 63 மில்லியன் டாலர் செலவில் அன்று கட்டப்பட்ட இந்தக் கோபுரத்தை ஆண்டு தோறும் சுமார் இரண்டு மில்லியன் பேர் கண்டுகளிக்கிறார்கள்.

553.2 மீட்டர் உயரம் கொண்ட இந்தக் கோபுரத்தில், மின் ஏணிகள் பொருத்தப் பட்டுள்ளன. அவை, வினாடிக்கு 6.7 மீட்டர் என்ற வேகத்தில் இயங்குகின்றன. அதாவது, இந்தக் கோபுரத்தின் உச்சியை 58 வினாடிகளில் சென்றடையலாம் என்றால், மின் ஏணிகளின் இயங்கு வேகத்தை ஓரளவுக்கு உணர முடியும். இப்படி ஆறு உயர் வேக மின் ஏணிகள் இந்தக் கோபுரத்தில் உள்ளன. இவற்றில் பயணித்து, இந்தக் கோபுரத்தைச் சுற்றிப் பார்க்க வசதி செய்யப்பட்டுள்ளது.

காற்றின் வேகத்தைத் தாக்குப் பிடிக்கும் வகையில், உட்கூடற்றதாகக் கட்டப்பட்டிருக்





கும் இந்த சி என் கோபுரம், மொத்தம் 1,30,000 டன் எடை கொண்டது. இதைக் கட்டி முடிக்க நாற்பது மாதங்கள் ஆயின. இதன் கட்டுமானப் பணியில் 1537 பேர் ஈடுபட்டனர். இதில் 500 டன் இரும்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. அடித் தளத்தை அமைப் பதில் மட்டும் 7034 கன மீட்டர் அளவுக்கு கான்கிரீட் உபயோகித்துள்ளனர்.

181 மாடிகளைக் கொண்ட இந்தக் கோபுரத்தில், சுற்றுலாப் பயணிகள் சாப்பிடுவதற்காக உணவகம் அமைக்கப்பட்டுள்ளது. அதைப் போன்றே, விண் நோக்கு நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விண்நோக்கு நிலையத்தின் பெயர் 'ஸ்கைபாட்.' கனடாவின் தொழில் வளத்தைக் காட்டுவதற்காக மட்டுமல்ல; பெருகிவரும் உயரமான கட்டடங்களால், தகவல் தொடர்புகளில் உண்டான பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதும் இந்தப் பிரம்மாண்டமான கோபுரம் எழுந்ததற்குக் காரணம்! அன்டாரியோ ஏரியின் கரையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கோபுரத்தை, நவீன உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்று என வகைப்படுத்தியுள்ளது, அமெரிக்க கட்டுமானப் பொறியாளர்கள் சங்கம்!

- பி.தமிழ்ச்செல்வன், உ.எண். 1676, காஞ்சிபுரம்.

181 மாடிகள்



வண்ணம் தீட்டுங்கள்!

கைக்கு வேலை

இங்குள்ள படத்துக்கு வண்ணம் தீட்டி மகிழுங்கள்

கோகுலம் 30 அக்டோபர் 2010





நாராயணன்.
உறுப்பினர் எண்:1204
சிறுமயர் துவக்கப்பள்ளி.
சேலம்.





ஏ.எஸ். நிவேதிதா.
செட்டிநாடு வித்யா மந்திர்.
கரூர்.

சுட்டீஸ் கைவண்ணம்!



மோகனப் பிரியா.
ஸ்ரீ ரமணா வித்யாலயா.
ராஜபாளையம்.




கே.ஜெ.ஷிஃபானா அஃப்ஸின்.
உறுப்பினர் எண்:913
ஆக்ஸ்போர்டு மெட்ரிக்
மேல்நிலைப்பள்ளி. கூத்தாநல்லூர்.



வை.ச.பிரசாத்.
எஸ்.பி.ஓ.ஏ மெட்ரிக்
மேல்நிலைப்பள்ளி.
மதுரை.

கவலையாய் நடந்து கொண்டிருந்தான் சிங்காரம். 'இப்படியே இருந்தா எப்படித்தான் வாழறது? இனி நீ வேலை பார்த்து வந்தாத்தான் சாப்பாடு' அம்மா கோபமாகச் சொன்னது அவன் காதில் ஒலித்தது. 'அம்மா என்ன செய்வாள், பாவம்! அப்பா இறந்து பல ஆண்டுகளாக, தானே உழைத்துக் காப்பாற்றியிருக்கிறாள். அம்மாவின் கஷ்டம் புரியாமல் நாம் இவ்வளவு நாட்களைக் கடத்தியது தவறுதான். ஏதாவது வேலைக்குச் சென்று சம்பாதிக்க வேண்டும். அம்மா உழைத்தது போதும். இனியாவது நிம்மதியாக ஓய்வெடுக்க வேண்டும்.' என்று நினைத்துக் கொண்டான்.

கோபித்த போதும், பழைய சோற்றை



மாயப்

பாத்திரங்கள்!



ஒரு மூட்டையாகக் கட்டிக் கொடுத்திருந்த அம்மாவின் அன்பு அவன் கண்களில் நீரை வரவழைத்தது. கண்களைத் துடைத்துக் கொண்டே நடந்தான்.வெகுதூரம் நடந்து வந்த சிங்காரத்துக்கு, கால்கள் வலித்தன. தவிர, சூரியனின் வெப்பத்தாலும் களைத்துப் போயிருந்தான். அங்கிருந்த பெரிய ஆலமரத்தைப் பார்த்ததும், சற்று படுக்கலாம் என்று தோன்றியது. சாப் பாட்டு மூட்டையைத் தலைக்கருகே வைத்துவிட்டுப் படுத்தான். அப்படியே தூங்கிப் போனான்.

அந்த மரத்தின் மேல் சில தேவதைகள் வசித்து வந்தன. அவன் வைத்திருந்த மூட்டையைப் பார்த்தன. பிரித்து அதிலிருந்த பழைய சோற்றை ஒரு கவளம் எடுத்துச் சாப்பிட்டன. அந்த ருசி அவற்றுக்குப் பிடித்துப் போனது. எனவே, அனைத்தையும் அவை சாப்பிட்டன. பதிலுக்கு, அதில் நான்கு கிண்ணங்களை வைத்து மூடி, அவன் தலைக்கருகே வைத்துவிட்டு மரத்தில் ஏறிக் கொண்டன. கண் விழித்த சிங்காரத் துக்குப் பசி எடுத்தது. மூட்டையை வேகமாகப் பிரித்தான். அதில் உணவுக்குப் பதிலாக வெறும் கிண்ணங்களே இருந்தன. 'சே! இப்போ சாப்பாட்டுக்கு நான் என்ன பண்ணுவேன்' என்றான் உரக்க.

மறுகணம், அந்தக் கிண்ணங்களிலிருந்து நான்கு பெண்கள் வெளிப்பட்டார்கள். அவர்கள் கைகளில் வைத்திருந்த பாத்திரங்களில் சுடச்சுட விதவிதமான உணவுகள்! பசி வேகத்தில் இருந்த அவன் அனைத்தையும் சாப்பிட்டான். பின்பு கேட்டான்: 'நீங்கள் யார்? எனக்கு ஏன் உணவளித்தீர்கள்?' அதைக் கேட்டவுடன் ஒரு பெண் சொன்னாள்: 'உங்களின் உணவைச் சாப்பிட்ட தேவதைகள் அளித்தப் பரிசு இது! நீங்கள் எப்போது விரும்பினாலும் நாங்கள் வருவோம். எவ்வளவு பேருக்கு வேண்டுமானாலும் உணவளிப்போம்.'

'இவ்வளவு சக்தி கொண்ட தேவதைகள், என்னுடைய உணவை எடுத்துச் சாப்பிட வேண்டிய அவசியம் என்ன? தாங்களே சாப்பிட்டிருக்க முடியுமே?' என்றான் மீண்டும். அதைக் கேட்டதும் மரத்திலிருந்து கீழிறங்கிய ஒரு தேவதை சொன்னது: 'சிங்காரம், உன் மீது அம்மா கோபப்பட்டார்கள். ஆனால், உனக்கு அதனால் கோபம் வரவில்லை. அம்மாவின் மீதான அன்புதான் அதிகரித்தது. தாயை நேசிக்கின்ற, தாயின் சொல்லை மதிக்கின்ற, உனக்கு உதவ வேண்டும் என்றுதான் இந்தப் பரிசைக் கொடுத்தோம்....கொண்டு போ.'

சிங்காரத்தின் வீட்டில் இப்போதெல்லாம் கூட்டம் இருந்து கொண்டே இருக்கிறது. அங்கே வருபவர்களுக் கெல்லாம் உணவளிப்பதையே தன்னுடைய கடமையாக மாற்றிக்கொண்டு விட்டான் சிங்காரம்.


- மெ. அ. கா. ஹாஜா தவ்பீக்,
பதினொன்றாம் வகுப்பு,
எல்.கே.மேல்நிலைப்பள்ளி,
காயல்பட்டினம்.

✱ ஆஸ்திரேலிய நாட்டின் சின்னமாக விளங்குவது கோலா (koala) என்னும் விலங்கு. இது யூகலிப்டஸ் மரத்தின் இலைகளைத்தான் உணவாக உட்கொள்ளும் என்கிறார்கள்.

✱ உலகில் வாழும் விலங்குகளில் மிகக் கொடூரமான குணமுடையதாகக் கருதப்படுவது ஹைனா (hynae) எனப்படும் செந்நாய்தான்.

✱ பறவைகள் கூடுகட்டும் என்பது நமக்குத் தெரியும். ஆனால், மனிதக் குரங்குகளும் கூடு கட்டும். குறிப்பாக குட்டிகளுடன் வாழும் பெண் மனிதக் குரங்குகள் மரங்களில் கூடு போன்ற அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளும்.





- ஆர். ஆசிக் அகமது,
உ.எண்.1157,
கம்பம்

✱ குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட முதல் ஆட்டுக் குட்டியின் பெயர் சோஃபியா.

✱ குழந்தைகளைக் கவரும் விதமாகப் புதுப்புது பொம்மைகள் தினந்தோறும் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. என்றாலும் உலகளவில் அதிகம் விற்பனையாகும் பொம்மை பார்பிதான்.

✱ ஐஸ் ஹாக்கியில் விளையாடப் பயன்படுத்தும் பந்தை 'பக்' (puck) என்கிறார்கள்.

✱ பாகிஸ்தானிலும் பஞ்

சாப், ஹைதராபாத் என்று சொல்லப்படும் பகுதிகள் இருக்கின்றன. அதேபோல அமெரிக்காவிலும் சேலம் என்ற பெயரு டன் ஒரு பகுதி உள்ளது.

✱ முட்டையில் பலவிதமான சத்து கள் உண்டு என்பார்கள். அதில், இல்லாத சத்து, வைட்டமின் சி.

- எஸ். வினீத் மாதவன்,
உ.எண். 1196, மதுரை.



வைத்தால், வீட் டினுள் குளிர்ச்சி இருப்பதோடு, கிருமிகளும் பரவாது.

-எம்.மிருணாளினி,
உ.எண். 1607, திருமோகூர்.

✱ இரவுப் பறவையான வௌ வால்களில் பலவகைகள் உண்டு. இவை தோன்றி, 60 லட்சம் ஆண்டுகள் ஆகின் றன என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஜோங்லோக்!



✱ இந்தியாவிலேயே, முழுக்க முழுக்க எவர்சில்வரால் ஆன ரயில் பெட்டி 1999 ஆம் ஆண்டு தயாரிக்கப் பட்டது. அதுவும் சென்னை பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டி தொழிற்சாலையில்!

✱ 'கொரியர்' (courier) என்பது இன்று பலருக்கும் தெரிந்துவிட்ட ஒன்று. ஆனால், அது ஃபிரெஞ்சு மொழிச் சொல். அதற்கு, 'செய்தி' என்று பொருள்.

✱ விலைமதிப்பு மிக்க பூ என்றால், அது குங்குமப்பூதான். ஏன் தெரியுமா? அதன் ஒரு கிராம் தயா ரிக்க, 3725 பூக்கள் தேவைப்படும் என்கிறார்கள்.

✱ வேப்பமரம் குளிர்ச்சியானது; கிருமி நாசினியும்கூட! அத னால், வீட்டின் முகப் பில் வேப்ப மரத்தை



✱ உலகப் புகழ் பெற்ற நாடக ஆசிரியர் ஷேக்ஸ் பியர். அந்தப் பெயருக்கு, 'உலகத்தையே அசைத்தவர்' என்று பொருள்.

✱ 'மெட்ராஸ்' என்பது சென்னையின் பழைய பெயர். இது, 'மெட்ரே -டி -டியாஸ்' என்ற போர்ச்சுக்கீசியச் சொல் லில் இருந்து உருவா னது.


✱ இந்தோனே ஷியாவில், 'ஜோங் லோக்' என்று சொல்லப் படும் விளையாட்டு, என்ன தெரியுமா? நம்ம பல்லாங்குழிதான்

- ஜி. பிரபாகரன்,
உ.எண். 961,
காஞ்சிபுரம்.

புள்ளிகளை இணையுங்கள்



கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்



நோபல் பெண்மணி!



* இவர் ஜெர்மனியில் காத்தோவிஸ் நகரில் 1906 ஜூன் 28 அன்று பிறந்தவர்.
* இவரது தந்தையார் ஃபிரெடரிக், பல்கலைக்கழகப் பேராசிரியர்
* 1924ல் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்று, 1930ஆம் ஆண்டு முனைவர் பட்டமும் பெற்றார்.
* இவர் டாக்டர் ஜோசப் எட்வர்ட் மேயர் என்பவரை மணந்து, திருமணத்துக்குப் பிறகு அமெரிக்காவில் குடியேறினார்.
* அந்நாளில் அமெரிக்காவில் பெண்களுக்கு அறிவியல் கூடங்களில் அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. ஆதலின் கணவருக்கு உதவியாக இருந்தார் என்றாலும், அவருடன் பல்கலைக்கழகங்களில் இணைந்து பணியாற்ற இயலவில்லை.
* 1940ஆம் ஆண்டு, அணுக் கருவினுள் ஒரு துகள் உள் மையத்தைச் சுற்றி வருவதாகவும், அந்தத் துகள்கள் தாங்கள் சுழற்சி அச்சில் சுற்றிக் கொண்டிருப்பதாகவும் கணித்தார்.
* அமெரிக்க இயற்பியல் கழகத்தில் பெண் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கும் வகையில் இவரது பெயரால் சிறப்பு விருது நிறுவப்பட்டுள்ளது.
* சான்டியாகோவில் கலிஃபோர்னியா பல்கலைக்கழகம் இவர் பெயரில் வருடாந்திரக் கருத்தரங்கமும் நிறுவப்பட்டுள்ளது.
* இயற்பியலில் நோபல் பரிசு பெற்ற மேரி கியூரிக்குப் பிறகு 1963 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றவர் இவரே.
* 1972ம் ஆண்டு பிப்ரவரி 20ந்தேதி இவர் மரணம் அடைந்தார்.

அவர் யார்?

- கி.சிந்து,
உ. எண் 786, மயிலாடுதுறை



விடை: மரியா கோயப்பெர்ட் மேயர் Maria Goeppert Mayer



முத்துப்

I 1.பொடிப் பையனுக்குப் பொட்டு உருமால் - அது என்ன?

2. மகள் மணப் பந்தலில்; அன்னையோ பாதையோரம் - அவர்கள் யார்?

- எம்.மிருணாளினி,
உ. எண் 1567, மதுரை

II 1. காண உருவமுண்டு; கட்டிப் பிடிக்க வழியில்லை - அது என்ன?

2. சிறகில்லாதவனும் சில நேரம் பறப்பான் - அவன் யார்?

3. தங்கச்சி முகத்திலே தங்கப்பழம் காய்க்கிறது - அது என்ன?

4. தேடி வந்தவன் ஓடித் திரும்புகிறான் - அவன் யார்?

5. நடக்க முடியாது; ஆனால் நகராமல் இருக்காது - அது என்ன?

6. வாசம் மிகுந்த பூ; ஆனால் பூஜைக்கு உதவாது - அது என்ன?

7. குளிர்ந்த நிலாக் கண்டால், முகம் கோணுவான்; சுடுகின்ற சூரியனைப் பார்த்து நகைப்பான் - இவன் யார்?

8. முத்துப் பல்லழகி முகம் காட்டி நிற்கிறாள் - அவள் யார்?

- பி.சௌமியா, பதினொன்றாம் வகுப்பு, அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்

III 1. இருப்பது இரண்டு கால்; ஓடுவது குதிரை வேகம்! இறகு உண்டு; பறக்காது - அது என்ன?

2.வளைந்து நெளிந்து போனாலும் வழிகாட்டக் காத்திருப்பான் - அவன் யார்?

3. வினா இல்லாமலே ஒரு விடை - என்ன விடை?

- பு.தருண்குமார், ஆறாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, செஞ்சி



பல்லழகி!

IV1.கோணக் கோணப் புளியங்கா; கொங்கு நாட்டுப் புளியங்கா; ஊரையெல்லாம் சேர்த்து வைக்கும் - அது என்ன?

2. பல நாள் காய்ந்து ஒரு நாள் பழுக்கும் - அது என்ன?

- ந.பிருந்தா, மயிலாடுதுறை

V1. நண்பர்கள் இரண்டு பேர்; பகலில் சந்திப்பதே இல்லை. இரவில் பிரிவதே இல்லை - இவர்கள் யார்?

2. பார்க்கலாம்; தொடலாம். ஆனால் பிடிக்க முடியாது - இது என்ன?



3. சின்னச் சின்ன கதவுகள்; ஆசாரி செய்யாத கதவுகள்; திறந்தாலும் சத்தம் வராது; மூடினாலும் சத்தம் வராது - அது என்ன?

- எஸ்.மேரி ஜீனோ, கேரளா

VI1. அரிசி போல பூ பூக்கும்; அம்மாடியென்று அலற வைக்கும் - அது என்ன?

2. தீப்பொறி பறக்கும்; எரியாது. கையில் பிடித்தால் சுடாது - அது என்ன?

- ஆர்.எஸ்.அகல்யா, மயிலாடுதுறை

விடைகள்:


I தீக்குச்சி, முத்து, சிப்பி

II புகை, பஞ்சு, சிரிப்பு, அலை, கடிகாரம், தாழம்பூ, தாமரை, சோளக் கதிர், **III** நெருப்புக்கோழி, மைல் கல், பணிவிடை

IV சாலை, செங்கல்

V கதவுகள், நிழல், இமைகள்

VI பச்சை மிளகாய், மின்மினி










கிரிக்கெட் to விமானப்படை!

மீண்

கேப்




கோகுலம்
அக்டோபர் 2010

காந்திஜி லாகூரில் தங்கியிருந்தபோது, ஒரு நாள் படேல் விடுதலை செய்யப்பட்டதாகத் தந்தி வந்தது. அதைப் பிரித்துப் பார்த்த சந்திர சங்கர் சுக்லா, செய்தியை அனைவருக்கும் தெரிவித்துவிட்டார்.

தக்கர் பாபா அந்நேரத்தில் அங்கு இல்லாததால், அவரின் செயலாளரிடம் செய்தியைத் தெரிவித்துவிட்டார். ஆனால், அச்செயலாளரோ தகவலை தக்கர் பாபாவிடம் சொல்லவில்லை.

பாபா மாலையில் அண்ணலைச் சந்தித்தபோது, இச்செய்தி தெரியவந்தது.



அறிவுரைகள்!



அண்ணல் சுக்லாஜியிடம் ''தந்தியை யார் பிரித்தார்கள்?'' என்று கேட்டார்.

''நான்தான். அப்போது பாபா அங்கு இல்லை. எனவே செயலாளரிடம் தெரித்துவிட்டேன்'' என்றார் சுக்லாஜி.

''அதெப்படி, தந்தியைப் பிரித்ததோ நீங்கள், ஆகையால் நீங்கள்தான் அனைவருக்கும் செய்தியைத் தெரிவிக்க வேண்டும். என்னுடைய கருத்துப்படி கட்டுப்பாடு விதிகளில் ஏதோ குறை உள்ளது எனத் தெரிகிறது'' எனப் பதில் தந்தார் அண்ணல்.

அண்ணல் காந்தியின் படுக்கையில் எப்போதும் ஒரு கதர் மெத்தை விரிக்கப்பட்டிருக்கும். தினசரி அதை வெயிலில் காயப்போடவேண்டும். அதற்குப் பதிலாக மாற்று மெத்தை ஒன்றை விரிக்க வேண்டும். ஒரு சமயம் மாற்று மெத்தை இல்லாததால் மில் நூல் மெத்தை விரித்து மேலே, கதர் போர்வை விரித்திருந்தார்கள். காந்திக்கு இவ்விஷயம் தெரிந்த உடன், இதன் பொறுப்பைக் கவனிக்கும் பிரிஜ் கிருஷ்ணாவை அழைத்து ''ஏன் கதர் மெத்தையை விரிக்கவில்லை?'' என்று கேட்டார்.

பிரிஜ் கிருஷ்ணா இதை மறைக்க எவ்வளவோ சாக்குப் போக்குகள் சொன்னார். காந்திஜியிடம் அவரது சமாதானம் பலிக்கவில்லை. ''நம்பிக்கையின் பேரில்

நான் எல்லாப் பொறுப்புக்களையும் உன்னிடம் கொடுத்துள்ளேன். எனவே, இதுபோன்ற தவறுகள் இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்'' என அறிவுறுத்தினார் மகாத்மா.



கடும் வெயில் நேரத்தில், ஈரக் களி மண்ணைத் துணியில் வைத்துக் கட்டி, அதை அடிவயிற்றில் வைத்துத் தூங்கு




வார் காந்திஜி. மண் பட்டி கீழே விழாதிருக்க, அதன் மேல் ஒரு துணியைச் சுற்றி, மூடி போடாமல் ஒரு ஊசியைக் குத்தி வைப்பார் அண்ணல். ஒரு சமயம் இவ்வேலை யைச் செய்யும் பெண் ஊசியைத் தொலைத்து விட்டு, மகாத்மா வருத்தப்படுவார் என்பதால் வேறு ஊசியைக் குத்தினார். அப் பிரத்யேக ஊசியைப் புத்தக அலமாரியில் எடுத்த காந்திஜி, அப் பெண் மண்பட்டியைக் கொண்டு வந்த போது, ''இந்த ஊசி எங்கிருந்தது?'' எனக் கேட்டார்.

குளிக்கும் அறையில் விழுந்து விட்டது. பிறகு கிடைத்துவிட்டது என்று சொன்னாள் அப் பெண்.

''இதோ, அந்த ஊசி!'' என்று எடுத்துக் காட்டிய மகாத்மா சொன்னார்: ''நீ பயத்தினால் ஒரு ஊசிக்காகப் பொய் சொல்கிறாய். இச்சிறு பொரு ளுக்காக இன்று பொய் சொன்னால், நாளை அது பெரிதாக வளர்ந்துவிடும். இனி இப்படிச் செய்யாதே!''

- ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1475,
கோபி.



உங்கள் கை வண்ணம்!




கே.எஸ்.யோகேஸ்வரன்,
உ.எண் 146,
திருச்சி.

எம். சங்கீதா,
கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா,
தருமபுரி.



எஸ்.ஏ. மைதிலி,
விவேகானந்தா மெட்ரிக் பள்ளி,
நாமக்கல்.







கு. அகிலா.
கிங் யுனிவர்ஸ் மெட்ரிக் பள்ளி.
நெல்லை.


எஸ்.ராதா கிருஷ்ணன்.
நப்பின்னை மெட்ரிக் பள்ளி.
சென்னை.



எம். ஜி. வைஷ்ணவி.
ஏ.ஜெ.சி.ஆங்கிலப்பள்ளி.
கும்பகோணம்.



கு. தமிழ்ச்செல்வன்.
உறுப்பினர் எண்: 440.
கரூர்.



பொதுவாக, திறந்திருக்கும் பகுதியில் உள்ள திரவம் கொட்டிப் போவதுதான் இயல்பு. அதற்கு மாறாக, பால் பாயின்ட் பேனாவின் மை வெளியே கொட்டுவது இல்லையே, ஏன்?

மற்ற பேனாக்களுக்கும் பந்து முனைப் பேனாவுக்கும் வேறுபாடு உண்டு. நாம் பயன்படுத்தும் பந்து முனைப் பேனாவின் (ball point pen) எழுதும் முனைக்குக் கீழே, நீளமான பிளஸ்டிக் குழாய் காணப்படுகிறது. அந்தக் குழாய்க்குள் மை நிரம்பியுள்ளது. எழுதும் முனைப் பகுதியில், உலோகம் அல்லது நைலானால் ஆன மிகச் சிறிய பந்து இருக்கிறது. எழுதும்போது, முனைப்பகுதியில் உள்ள பந்து சுழல் கிறது. அப்போது, கீழே உள்ள மை, அந்தப் பந்தில் ஒட்டிக் கொள்கிறது. எழுதாத நேரங்களில் அது அடைப் பானாகச் செயல்படுகிறது.



அதனால்தான் பந்துமுனைப் பேனாவில் உள்ள மை கொட்டுவது இல்லை.

- ஃபாத்திமா, மஹ்தூமியா உயர்நிலைப் பள்ளி, கீழக்கரை.

கொட்டாது



கோடைக் காலங்களில் எல்லா அறைகளும் வெப்பமாகக் காணப்படும். இதற்கு மாறாக காகிதங்கள் அடுக்கி வைக்கப் பட்டுள்ள அறையில் ஓரளவுக்குக் குளிர்ச்சி காணப்படும். அது எதனால்?

பொதுவாகவே காற்றில் எப்போதும் ஈரப்பதம் இருக்கும். ஆங்கிலத்தில் இதை humidity என்பர். இந்த



மை!


ஈரப்பதத்தைப் பொறுத்துத்தான் வெப்பமோ, குளிர்ச்சியோ நம்மால் உணரப்படும். தவிர, காற்றில் உள்ள ஈரப்பதத்தை ஈர்த்துக் கொள்ளும் ஆற்றல் காகிதங் களுக்கு உண்டு. அதனால்தான் மற்ற அறைகளைவிட, காகி தங்கள் அல்லது புத்தகங் கள் வைக்கப்பட்டுள்ள அறை, கோடைக் காலத்தில் குளிர்ச்சி நிரம்பியதாகத் தோன்றுகிறது.



பகலின் கடுமையான வெப்பம் இருந்த போதிலும், சிமெண்ட் தரைகள், இரவு நேரத்தில் சீக்கிரம் குளிர்ச்சியடைந்து விடுகின்றன. அதன் காரணம் என்ன?


சிமெண்ட் தரையில், பார்வைக்குப் புலனாகாத நுண்ணிய துவாரங்கள் உண்டு. அந்தத் துவாரங்களின் வழியே, பகலின் வெப்பத்தை விரைவில் வெளியேற்றி விடும் தன்மை சிமெண்ட் தரைக்கு உண்டு. அதனால்தான், மற்ற தரைப் பகுதி களைவிட சீக்கிரமே அது குளிர்ந்து விடுகிறது.

- சு. அபிஷேக்,
உ.எண். 518,
சென்னை.





யார் சுற்றிய பம்பரம்?



விடை: தாமு

கண்ணாடி

கதை: சு.அபிஷேக்.
உறுப்பினர் எண்-518,
சென்னை.
படம்: பிள்ளை



I. கீழே குறிப்பிட்டுள்ள கணக்குப் புதிரைக் கவனியுங்கள். பெருக்கப்பட வேண்டிய எண் மாறவில்லை. அதற்கான விடைகளும் தரப்பட்டுள்ளன. பெருக்க வேண்டிய எண்கள் எவை என்று கண்டுபிடிக்க வேண்டும். கண்டுபிடித்துப் பாருங்கள், அந்த எண்களில் ஆச்சர்யமான ஒற்றுமை இருக்கிறது.

12345679 X ...... = 111,111,111
12345679 X ......= 222,222,222
12345679 X ......= 333,333,333
12345679 X ......= 444,444,444
12345679 X ......= 555,555,555
12345679 X ......= 666,666,666
12345679 X ......= 777,777,777
12345679 X ......= 888,888,888
12345679 X ......= 999,999,999

-மு. அருண்குமார்,
உ.எண். 670, ஓசூர்.

II. கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்ணைக் கவனியுங்கள். அந்த எண்ணை அதே எண்ணால் பெருக்கினால், விடை ஆச்சர்யம் தரும் எண்ணாக இருக்கும். அது என்ன என்று கண்டுபிடியுங்கள்.

111111111

III. கீழே கொடுக்கப்பட்டுள்ள புதிர்களைக் கவனித்துப் படியுங்கள். அவற்றுக்கான விடை 'அ' என்ற எழுத்தில் ஆரம்பமாகிறது.





1. ஒரு செல் உயிரினம் இது.

2. சந்திரன், சூரியனிடமிருந்து ஒளியைப் பெறாத- பூமிக்கு வெளிச்சம் தராத நாள்.

3. இரத்த அழுத்தத்துடன் சம்பந்தப்பட்ட சுரப்பி.

4. போகும் இடமெல்லாம் வேர் கொள்ளும் புல் வகை: விநாயகருக்கு உகந்தது!

5. பொருளாதாரத் துறையில் நோபல் பரிசுபெற்ற இந்தியர்.

6. 'தீன் இலாஹி' என்ற மதத்தைத் தோற்றுவித்தவர்

7. வாலிக்குப் பிள்ளை; ராமனுக்குத் தூதன்.- இவன் யார்?

8. பாதி சாஸ்திரம்னா என்ன தெரியுமா? சாணக்கியர் சொன்னது வேற பெயர்ல இருக்கு. இது என்ன?

9. இந்த நாட்டோட பெயர்லயே அவசரம் இருக்கு. இது எந்த நாடு?

10. இவரைக் குள்ள முனின்னு சொல் வாங்க. இவர் யாருன்னு தெரியுமா?

- த. தாரணி, உ.எண். 785, தூய மார்ஸினா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, அம்மாபேட்டை.



ஒற்றுமை!




I. விடைகள்: ஒன்பது மற்றும் அதன் மடங்குகளால் பெருக்கப்பட்டால் மேற்கண்ட விடைகள் வரும். 9,18,27,36,45,54,63,72,81.

II. 111111111 x 111111111 = 12345678987654321. 'விகடகவி' என்பதைப் போல, எண்கள் ஒன்றில் தொடங்கி ஒன்பது வரை ஏறு வரிசையில் சென்று மீண்டும் இறங்கு வரிசையில் வந்து ஒன்றில் முடிகின்றன.

III. 1. அமீபா, 2. அமாவாசை, 3. அட்ரீனல், 4.அறுகம்புல், 5. அமர்த்தியா சென் 6. அக்பர்.7. அங்கதன், 8. அர்த்த சாஸ்திரம், 9. அர்ஜெண்டினா 10. அகத்தியர்

தங்கத் தட்டு!



“ஐயா, இன்றிரவு மட்டும் தங்க அனுமதிப்பீர்களா?” பரிதாபமாகக் கேட்ட அந்த இளைஞனைப் பார்த்தார் முதியவர். அவன் கண்களில் சோர்வு தென்பட்டது. தோற்றத்தில் மிகவும் வாட்டம் தெரிந்தது. கதவைத் திறந்து உள்ளே அனுமதித்தார். ‘பசியாக இருக்கிறாய். சாப்பிட்டுப் படு’ என்று சொன்னார். தட்டில் உணவை வைத்து எடுத்து வந்தார். உணவை விட, அந்தத் தட்டு அவனைக் கவர்ந்தது. அது தங்கத் தட்டு!


‘ஆ. இந்தத் தட்டு ஒன்று போதும். வாழ்க்கையை நிம்மதியாகக் கழிக்க!’ என்று எண்ணியது அவன் மனம். உணவைச் சாப்பிடும் போதும், தட்டைப் பற்றியே ஓடியது அவன் சிந்தனை.

சாப்பிட்டு முடித்ததும், அவனைப் படுக்கச் சொன்ன முதியவர் தம் அறையினுள்ளே சென்று படுத்துக் கொண்டார். நேரம் கடந்தது. அந்த இளைஞனால் தூங்க முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தான்.

பிறகு மெல்ல எழுந்து அந்த முதியவரின் அறையைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தான். அவர் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தார். அவர் தலைக்கு மேல் அந்தத் தட்டு கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. அதில், நீர் நிறைந்திருந்தது. விரல் பட்டாலும், நீர்த்துளி பெரியவர்மேல் சிதறும்.

அதைக் கண்டதும், வெளியே சென்றவன், ஒரு நாணல் குழலுடன் திரும்பினான். தட்டில் இருந்த நீரை உறிஞ்சினான். பிறகு தட்டை அவிழ்த்து எடுத்துக் கொண்டான். சற்று தொலைவில் இருந்த குட்டையில் போட்டுவிட்டுத் திரும்பினான். படுத்துத் தூங்க ஆரம்பித்தான்.

சற்று நேரத்தில் முதியவர் கண்விழித்தார். தங்கத் தட்டைக் காணாமல் திகைத்தார்.



வெளியே வந்தார். அந்த இளைஞன் தூங்கிக் கொண்டிருந்தான்.அவன் கால்களைக் கவனித்தார். சேறு படிந்திருந்தது. உடனே, அருகிலுள்ள குட்டையை நோக்கி நடந்தார். தண்ணீரில் இறங்கித் தேடினார். அதிக ஆழமில்லாததால், சற்று நேரத்தில் அகப்பட்டது தட்டு. அதைக் கொண்டு வந்தார். மீண்டும் கட்டித் தொங்கவிட்டார். தூங்கிப் போனார்.



மறுநாள் பொழுது விடிந்தது. பரபரப்பாக எழுந்தான் அந்த இளைஞன். பெரியவரிடம் நன்றி சொல்லி விடைபெற்றான். வேகமாகக் குட்டையை நோக்கி நடந்தான். அதில் இறங்கித் தேட ஆரம்பித்தான். தட்டைக் காணவில்லை. அப்போதுதான் கேட்டது அந்தக் குரல்: ' தம்பி, என்ன தவறிப் போய் குட்டையில் விழுந்துவிட்டாயா?' திரும்பிப் பார்த்தான். அந்தப் பெரியவர் நின்று கொண்டிருந்தார்.

தங்கத் தட்டைத் தேடி வந்திருக்கிறார் என்ற பயத்தில் அவன் சொன்னான்: 'இல்லை. தினமும் குளத்தில் நீச்சலடிப்பது என் வழக்கம்.'

அதைக் கேட்ட முதியவர் சொன்னார்: 'நல்ல பழக்கம் தான். ஆனால், இது அழுக்கு நீர்க் குட்டை. இதில் குளித்தால் நோய்தான் வரும். தவிர, தங்கத் தட்டும் கிடைக்காது.'

சொன்ன முதியவர் திரும்பிப் பார்க்காமல் வேகமாக நடந்தார். இளைஞன் அதிர்ச்சியாலும் அவமானத்தாலும் தலைகுனிந்தான்.

-வி. ஹரிஹர சுதன், எட்டாம் வகுப்பு, சாரதா மேல்நிலைப் பள்ளி, செஞ்சி.



பச்சைப் பசேலென்று பசுமையின் சிரிப்பாகத் தென்படும் வயல்களைப் பார்க்க வேண்டுமா? சலசலத்தோடும் குளிர்ந்த நீரைப் பார்க்க வேண்டுமா? செடி, கொடிகளாலும் மரங்களாலும் அலங்கரித்துக் கொண்டு கம்பீரமாகக் காட்சி தரும் மலைகளைப் பார்க்க வேண்டுமா? இவை எல்லாவற்றுக்கும் ஒரே பதில், கோபிசெட்டிப்பாளையத்துக்கு வருவதுதான்! இதுதான் எங்கள் ஊர்.

மிகப் பழைமையான வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட கொங்கு மண்டலத்தைச் சேர்ந்தது கோபி பகுதி. கங்கர்கள், சோழர்கள், பாண்டியர்கள், ஹொய்சாளர்கள், மைசூர் மன்னர்கள், திப்பு சுல்தான், நாயக்கர்கள் என்று பலரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பகுதி இது. ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் இதுவும் ஒன்று. சென்னிமலைக்கு அருகே, நொய்யல் ஆற்றின் கரையில் காணப்படும் 'கொடுமணல் நாகரிகம்' 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியில் வாழ்ந்தவர் கோபிச் செட்டிப் பிள்ளான். மிகச் சிறந்த வள்ளலான இவரிடம் புலவர் ஒருவர் உதவி வேண்டி வந்தார். அந்தச் சமயத்தில், பிள்ளானிடம் பொருள் இல்லாததால் தம் உயிரை மாய்த்துக் கொள்ள அங்கிருந்த புலிக் குகைக்குச் சென்றாராம். அங்கே புலிக்குப் பதிலாகப் பொற்குவியல் இருந் ததாம். அதைக் கொண்டு வந்து புலவருக்குக் கொடுத்து மகிழ்ந்தார். அவர் பெயரால் அமைந்த ஊர்தான், கோபிசெட்டிப்பாளையம் என்று சொல்வார்கள்.

புலிக்குகையில் பொற்குவியல்!






பட்டு நெசவு, மரம் அறுக்கும் தொழில், கல் சிற்பங்கள் வடித்தல் என்று பல்வேறு தொழில்கள் இங்கே நடைபெறுகின்றன. மூங்கில் மரங்கள் எங்கள் பகுதியிலும், சத்தியமங்கலம், அந்தியூர் ஆகிய பகுதிகளிலும் அதிகம். இவை காகிதத் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பயன்படுத்தப்படுகின்றன.

கொடிவேரி தடுப்பணை, பவானிசாகர் அணைக்கட்டு போன்ற சுற்றுலாத் தலங்கள், பண்ணாரி அம்மன் கோயில், பாரியூர் முருகன் கோயில், கொண்டத்துக் காளி கோயில்... என்று புகழ் பெற்ற ஆலயங்கள், என பார்க்கத் தகுந்த இடங் கள் பலவற்றை, சுற்றிலும் கொண்டிருக்கிறது எங்கள் ஊரான கோபிசெட்டிப் பாளையம்.

பெரும் பள்ளம் ஓடை, பிச்சைக் காரன் ஓடை என்னும் இரு ஓடைகளின் நடுவே அமைந்ததால் ஈரோடை என்று சொல்லப் பட்ட, இன்றைய ஈரோடு மாவட்டத்தில் உள்ளது எங்கள் ஊர்!

- ஜி. எஸ். ஸ்ரீமதி,
உ.எண். 1382, கோபி



மூளைக்கு வேலை

வித்தியாசங்களைக் கண்டுபிடி!



இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



விடைகள்: 1.டெலிஃபோனில் பட்டன் 2. முக்காலியின் கால் 3.சிதறும் நீர்த்துளி 4. அம்மாவின் கையில் வளையல் 5. சிறுவனின் கை விரல்.

கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டையில்!

கோவை அருகே சிறுமுகையில் இயங்கி வரும் விஜயலக்ஷ்மி மெட்ரிகுலேஷன் பள்ளியின் மாணவ மாணவிகள் இந்தப் பட்டியலிலும் தொடர்ந்து இடம் பெறுகிறார்கள்.

1776. பி.அஜிதா, ஏழாம் வகுப்பு
777. ஆர். சக்கரவர்த்தி, ஒன்பதாம் வகுப்பு
778. சீ. பூர்ணிமாக்கனி, ஒன்பதாம் வகுப்பு
779. எஸ். நித்யப் பிரகாஷ், எட்டாம் வகுப்பு
1780. கே. தர்ஷன், ஏழாம் வகுப்பு
1781. சு. அர்விந்த், ஆறாம் வகுப்பு
1782. ம.ந.அஸ்வின் குமார், எட்டாம் வகுப்பு
1783. நா. ஹரி பிரசன்னா, ஏழாம் வகுப்பு
1784. ல.சஞ்சய், ஆறாம் வகுப்பு
1785. யு. கௌசல்யா, ஏழாம் வகுப்பு.
1786. அ.ம. அரவிந்நாதன், ஆறாம் வகுப்பு
1787.ச. கீர்த்தனா, பதினொராம் வகுப்பு
1788. எம்.மீனா, எட்டாம் வகுப்பு
1789. வி. விவேக்குமார், பன்னிரண்டாம் வகுப்பு.
1790. சா.ரா. சபரிஷ், பன்னிரண்டாம் வகுப்பு.
1791. ஆர். ராகுல், ஒன்பதம் வகுப்பு
1792. ர.ச. சஞ்சு விகாசினி, ஏழாம் வகுப்பு
1793.ர. ஷாலினி, ஏழாம் வகுப்பு
1794. வி.அ. விக்டர் ஜோஷ்வா, எட்டாம் வகுப்பு
1795. கி. யாமினி, ஏழாம் வகுப்பு
1796. எஸ். தீப்ஷிகாங்கி, ஏழாம் வகுப்பு



1797. கே. எஸ். கிருபாதர்ஷிணி, ஆறாம் வகுப்பு

1798. பி. ஆர். சுபஸ்ரீ, ஆறாம் வகுப்பு

1799. கு. பிரியங்கா, எட்டாம் வகுப்பு

1800. வி.குமார், பத்தாம் வகுப்பு

1801. க. சந்தோஷ், ஒன்பதாம் வகுப்பு


1802. தி. கோ. ராகுல், எட்டாம் வகுப்பு

1803. எஸ். பி. விஸ்மிதாஸ்ரீ, ஏழாம் வகுப்பு

1804. ஹா. தீப்தி, எட்டாம் வகுப்பு

1805. தி. மோகன லஷ்மி, ஐந்தாம் வகுப்பு, சி.இ.நா. பெண்கள் நடுநிலைப் பள்ளி, சிவகாசி.

1806. எஸ். பவதாரிணி, இரண்டாம் வகுப்பு,



ஸ்ரீ ரேணுகா வித்யாலயா,லட்சுமிபுரம், தேனி

1807. ஏ. சுவாதி, பத்தாம் வகுப்பு, முருக தனுஷ்கோடி மகளிர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

1808. கோ. அமரபாரதி, பத்தாம் வகுப்பு, லூர்து மாதா மெட்ரிக் பள்ளி, உடுமலை.

1809. கோ. அமுதபாரதி, ஐந்தாம் வகுப்பு, லூர்து மாதா மெட்ரிக் பள்ளி, உடுமலை

1810. வி.ர.விஜய் குமார், எட்டாம் வகுப்பு, ஜான்ஸ் மேல்நிலைப் பள்ளி, பாளையங்கோட்டை.

1811. எஸ். திருசிவசக்தி, ஏழாம் வகுப்பு, விவேகம் மேல்நிலைப்பள்ளி, தாராபுரம்

1812. கே.டி. ஜவஹர் ஸ்ரீராம், ஐந்தாம் வகுப்பு, ஜீனியஸ் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி, திருவாரூர்.

1813. ஆர். எஸ். அகல்யா, ஏழாம் வகுப்பு, தி.ப.தி.அர. தேசிய மேல்நிலைப்பள்ளி, மயிலாடுதுறை

1814. கே. சுபகாமாட்சி, ஒன்பதாம் வகுப்பு, மரியா நிவாஸ் மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி, சென்னை

1815. பா. பிரணவப்ரியா, ஒன்பதாம் வகுப்பு,. பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

1816. ஜி. பாவனகௌரி, ஆறாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி, செங்கம்

1817. தெ. நந்தினி, ஒன்பதாம் வகுப்பு, பு.தி.வ.ச. உயர்நிலைப்பள்ளி, திருக்கழுக்குன்றம்

1818. பி.பி. நமிதா, முதல் வகுப்பு, மகரிஷி வித்யா மந்திர், ஓசூர்

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் :..

வயது :..

பெற்றோர் பெயர் :..

வகுப்பு, பள்ளி :..

....

வீட்டு முகவரி :..

....

....

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1819. செ. சத்ய ரூபா, ஏழாம் வகுப்பு, ஸ்ரீவிஜயலஷ்மி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, மேட்டுப்பாளையம்

1820. ஜே. ஹேமவல்லி, ஆறாம் வகுப்பு, திருத் தங்கல் நாடார் வித்யாலயா, சென்னை.

1821. ச. ராஜேஷ், ஒன்பதாம் வகுப்பு, பு.தி.வ.ச. உயர் நிலைப்பள்ளி, திருக்கழுக்குன்றம்.


1822. கி. தமிழரசன், முதல் வகுப்பு, வேலம்மாள் மேல்நிலைப்பள்ளி, பஞ்செட்டி.

1823. எஸ். சத்திய நாராயணன், ஆறாம் வகுப்பு, கேந்திரிய வித்யாலயா, காரைக்குடி

1824. தி.க. நிரஞ்சன், மூன்றாம் வகுப்பு, அருணா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி திருக்கழுக்குன்றம்

1825.ப பி. ஸ்ரீலஷ்மி, முதல் வகுப்பு, கே.எம்.கே. உயர்நிலைப்பள்ளி, காரைக்கால்.





புலேந்திரன்

"என்னையும் உன்கூட வேலைக்குக் கூட்டிட்டுப் போறியா? எனக்கு இங்கே சம்பளமே பத்தலை..." கவலையுடன் பேசிய கரடியைப் பார்த்தது யானை. சரி என்பது போலத் தலையசைத்தது.

மறுநாள்...

வழக்கம் போலப் புறப்பட்ட யானையுடன் வேலைக்குக் கிளம்பியது கரடி. தினமும் தோப்பில் கிடக்கும் மரக்கட்டைகளைக் கொண்டுபோய் இன்னோரிடத்தில் அடுக்கி வைக்க வேண்டும்.

கடுமையான வேலைதான். ஆனாலும் சலிக்காமல் உழைத்தது. அந்த வாரக் கடைசியில் கிடைத்த கூலியை எண்ணிப் பார்த்தது.

'அப்பாடி, இனி உணவுக்கோ செலவுக்கோ கவலைப்பட வேண்டாம்' என்று ஆனந்தப்பட்டது.

'நாளைக்குச் சந்தைக்குப் போய் ஒரு வாரத்துக்கு வேண்டியதை வாங்கிட்டு வருவோம். வீண் செலவு பண்ணக் கூடாது. கையிலே எப்பவும் கொஞ்சமாவது சேமிப்பு இருக்கணும்' என்றது யானை. அதை ஆமோதிப்பது போலவே தலையாட்டியது கரடி.

நினைத்தபடியே சந்தைக்குப் போனார்கள் இருவரும். அங்கே, தனக்

குத் தேவையான தேன், பழங்கள், ஆடைகள் இவற்றை வாங்க வேண்டும் என்பதுதான் கரடியின் நோக்கம். எனவே, பையில் இருந்த காசை எடுத்து எண்ணியது. அதைக் கவனித்த யானை, ''காசை இப்படி வெளியில் எடுத்து எண்ணக் கூடாது.'' என்று எச்சரித்தது. அதைக் கண்டு கொள்ளாமல் அலட்சியப் படுத்தியது கரடி.

சற்று தூரம் சென்றதும்,' அண்ணே' என்றது ஒரு குரல். கரடி திரும்பிப் பார்த்தது. அங்கே பாவம் போல நின்று கொண்டிருந்தது ஒரு நரி. ''நான் கொண்டு வந்த காசைத் தொலைச்சுட் டேன். வீட்டுல பிள்ளைங்க பசியோட இருப்பாங்க. இந்தத் தங்க மோதிரத்தைத் வைச்சுக்கிட்டுப்பணம்கொடுத்தீங்கன்னா

மோதிரம்!

உதவியா இருக்கும்.''

அந்த மோதிரத்தைப் பார்த்தது கரடி. ''அரைப் பவுன் இது. பிறந்த நாள் பரிசா என் தாத்தா கொடுத்தது'' என்றது நரி மீண்டும். 'அட, அரை பவுன்! விற்றால் எப்படியும் ஐயாயிரம் ரூபாய் கிடைக்கும். கையில் இருக்கும் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து இதை வாங்கினால், நமக்கு ஐயாயிரம் லாபம்' கடகடவென்று மனக் கணக்குப் போட்டது கரடி.



''சரி; என்னிடம் ஆயிரம் ரூபாய்தான் இருக்கிறது. வேறு பணமில்லை'' என்றது தயக்கத்துடன்.

''அது போதும். இந்த நேரத்தில் அது லட்ச ரூபாய்க்குச் சமம்'' என்றது நரி. அதைக் கேட்டதும், கரடிக்கு நரியின் வார்த்தைகளில் பெரும் நம்பிக்கை வந்தது. கையில் வைத்திருந்த பணத்தை எடுத்து நரியிடம் கொடுத்துவிட்டு, மோதிரத்தை வாங்கிக் கொண்டு வேகமாக நடந்தது. எதிரே வந்த யானை கேட்டது:

''என்ன? இன்னும் நீ பொருட்களை வாங்கவில்லையா?'' அதைக் கேட்ட கரடி நடந்த விஷயத்தைச் சொன்னது. ''என்ன! அரைப் பவுன் தங்க மோதிரத்தை ஆயிரம் ரூபாய்க்குத் தந்தானா? எங்கே காட்டு?'' வேகமாகச் சொன்னது யானை. இருவருமாக அதை எடுத்துக் கொண்டு கடைக்குப் போனார்கள். அப்போதுதான் தெரிந்தது, அது பித்தளை நகை என்று!

முகம் சூம்பிய நிலையில் நின்ற கரடியிடம் சொன்னது யானை: ''அதிகமாக உழைத்துச் சம்பாதிக்கலாம். தப்பில்லை. சீக்கிரம் நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்று நினைத்தால், இப்படிப் பட்ட ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். இனிமேலாவது எச்சரிக்கையாய் இரு!''

தன் பேராசையே பண இழப்புக்குக் காரணம் என்பதை உணர்ந்து கொண்ட கரடி, யானை தந்த பணத்தில், தனக்கான பொருட்களை வாங்கிக் கொண்டு திரும்பியது. ●

தச்சன் குருவி!

'டொக்! டொக்!' என்று ஒரே சீராக ஒலி எழும்பிக் கேட்டிருக்கிறீர்களா...? கேட்க நேர்ந்தால் அது 'தச்சன் குருவி' யின் வேலை என்று புரிந்த கொள் ளுங்கள்! ஆம்; தச்சர்களைப் போல மரங்களைப் பிளப்பதால், மரங்கொத்தி களுக்கு இப்ப டியும் ஒரு பெயருண்டு. மரங்கொத்திகள் எப்போது பார்த்தாலும் மரத்தைக் கொத்திக் கொண்டிருப்பதைக் காணலாம். வெறும் பொழுது போக் குக்காக கொத்தவில்லை. தம் உணவிற் காகவே பெரும்பாலும் மரத்தைக் கொத்துகின்றன. மரத்தின் உட்பகுதியில் வசிக்கும் சிறு சிறு பூச்சிகளே அவற்றின் உணவு! அவற்றை வெளிக்கொணர ஒரு நாளைக்கு சுமார் 5000 முதல் 8000 தட வைகள் வரை மரத்தைக் கொத்துகின்றன.

இது மட்டுமல்ல; முட்டைகளை இடு வதற்கு ஒரு இடம் வேண்டுமல்லவா? அதற்காகவும் இவை மரத்தைக் கொத்தி, அதில் குழியை உருவாக்குகின்றன. கொத்தும்போது தெளிக்கும் துகள்களே, அந்தக் குழியினுள் சேர்ந்து மெத்தை போல மிருதுவாக அமைகின்றன. அந்த மெத்தையில் முட்டையிட்டு அவற்றைப் பாதுகாக்கின்றன தச்சன் குருவிகள்.

மரங்கொத்திகளில் சுமார் 200 வகை உண்டு. இவை பூச்சிகள், பழங்கள், கொட்டைகள் போன்றவற்றைத் தின்று வாழ்கின்றன. பாம்புகள்தான் இவற்றின் முதல் எதிரி. பூச்சிகளைப் பெரும்பாலும் உண்பதால், இவை பூச்சிகளின் பெருக் கத்தைக் கட்டுப்படுத்துகின்றன.

மரங்கொத்தியின் மற்றொரு சிறப் பம்சம் அதன் நீளமான நாக்கு. அதன் நாக்கில் பசை போன்ற திரவம் காணப் படும். தாம் துளைத்த பகுதியினுள்ளும், மரத்தின் இடுக்குகளிலும் நாக்கை நீட்டி எறும்பு போன்ற சிறு பூச்சிகளை இவை பிடித்துச் சாப்பிடுகின்றன.

பெண் மரங்கொத்தி ஒரு முறையில் சுமார் நான்கு முட்டைகள் இடும். இவற்றை இரண்டு வாரங்கள் அடை காத்து குஞ்சு பொரிக்கின்றன. ஆண் மரங்கொத்தி உணவைத் தேடி வெளியே செல்லும்போது, பெண் மரங்கொத்தி குஞ்சுகளைக் காவல் காக்கும். குஞ்சுகள் இருபத்தைந்து நாட்களில் கூட்டை விட்டு வெளியே பறந்து செல்லும்.

மரங்கொத்திகள் சுமார் நான்கு வருடங்கள் முதல் 11 வருடங்கள் வரை உயிர் வாழ்கின்றன. இவை ஆஸ்திரே லியா மற்றும் அண்டார்ட்டிகாவைத் தவிர, உலகின் மரவளம் உள்ள அனைத் துப் பகுதிகளிலும் வசிக்கின்றன.

மெக்சிகோவில் காணப்படும் இம்பீ ரியல் மரங்கொத்தி அளவில் மிகப் பெரியதாக கண்டறியப்பட்டுள்ளது. இவை சுமார் 22 அங்குலம் அளவில் காணப்படுகின்றன.

மரங்களை வெட்டிச் சாய்த்து இயற் கையை மனிதர்கள் அழித்துக் கொண்டி ருக்கிறார்கள். ஆனால், மரங்களைப் பாதிக்கும் பூச்சிகளை அழித்து, வன வளம் காக்கின்றன மரங்கொத்திகள்! அட 'பசுமைக் காவலர்' என்று இவற் றைப் பாராட்டலாமா!



- எஸ்.தணிகைவேல்,
காஞ்சிபுரம்

பெயர்க்காரணம்



மண்ணெண்ணையை ஆங்கிலத்தில் 'கெரசின்' என்பர். கனடா நாட்டைச் சேர்ந்த ஆபிரகாம் ஜென்சர் என்பவர் 1854ம் ஆண்டில் பெட்ரோலிய எண்ணெயைச் சுத்திகரிக்கும்போது இதிலிருந்து விளக்கு எரிக்கும் எண்ணெயைப் பகுத்தறிந்தார். 'கெரசின்' என்பது கிரேக்கச் சொல். இதற்கு 'மெழுகு' என்று பொருள். மெழுகில் திரி வைத்து விளக்காக எரிப்பது போல, கெரசினில் திரி வைத்து எரித்து விளக்காகப் பயன்படுத்துவதால் இப்பெயர் வைத்தனர். அப்ப, மெழுகெண்ணெய்னு சொல்லலாமா?



குறள்!

தமிழ் இலக்கியத்தில், செய்யுள் வடிவத்தை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்று வகைப்படுத்துவர். அவற்றில், மிகச் சிறிய வடிவம் குறள் வெண்பா. அந்த வடிவத்தில் அமைந்த காரணத்தால், குறள் என்றே இது பெயர் கொண்டது. அருட்பா, மந்திரம், வாசகம் போன்றவை அவற்றின் உயர்வு கருதி 'திரு' என்னும் அடைமொழியால் சிறப்பிக்கப்பட்டன. அதைப் போன்றே குறளும் திரு என் னும் அடைமொழி சேர்ந்து, திருக்குறள் என்று பெயர் பெற்றது.

- சு.தங்கம், உ. எண் 287, சாகுபுரம்



அடித்துத் தள்ளு!

கூர்ந்த கவனத்தையும், குறி பார்த்து இயங்கும் திறனையும் அளிக்கும் விளையாட்டு கேரம். இந்த விளையாட்டின் தாயகம் ஃபிரான்ஸ் நாடு. ஃபிரெஞ்ச் மொழியில் 'கேரம்' எனும் சொல்லுக்கு 'அடித்துத் தள்ளச் செய்தல்' என்று பொருள். காய்களை ஸ்டிரைக்கர் கொண்டு அடித்துத் தள்ளுவதால் 'கேரம்' என்று பெயர் உண்டானது.

- ஆர்.பத்மப்ரியா, ஹூப்ளி

மெழுகெண்ணெய்?



தரிசு நிலத் தங்கம்!




இந்தியா, இந்தோனேஷியா, வியட் நாம், நைஜீரியா உள்ளிட்ட வெப்பமண்டல நாடுகளில் பெருமளவில் பயிராகிறது முந்திரி. தமிழ்நாட்டில் விழுப்புரம், கடலூர், பண்ருட்டி, புதுக்கோட்டை பகுதிகளில் இது அதிகம் பயிரிடப்படுகிறது என்றாலும் இதன் தாயகம் பிரேசில்!

பொதுவாக, பழத்தின் உள்ளேதான் அதன் கொட்டை காணப்படும். மாறாக, முந்திரியில் அது வெளியே நீண்டிருக்கும். அதனாலேயே 'முந்திரிக் கொட்டை போல முந்தாதே' என்று வழக்கில் சொல்வார்கள்.

எல்லா வகையான மண்ணிலும் முந்திரி பயிரிடலாம். என்றாலும் உவர் தன்மை இல்லாத மண் மிகவும் ஏற்றது. இப்பயிர் வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை கொண்டது. உலகிலேயே இந்தியா வில்தான் மிக அதிக அளவில் முந்திரி பயிரிடப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

முந்திரிப் பழத்தில் இருந்து வழியும் திரவம் தோலில் பட்டால் சிலருக்கு எரிச்சலும், கொப்பளமும் ஏற்படக்கூடும். என்றாலும், ஒவ்வாமையை ஏற்படுத்தக் கூடிய கொட்டை வகைகளில், முந்திரிதான் மிகக் குறைவானது. அதிகம் எது தெரியுமா? நிலக்கடலை! பயன்தராது என்று சொல்லப் படுகிற தரிசு நிலத்தில் பயன் தரக் கூடியதாக விளங்குவதால், தரிசு நிலத் தங்கம் என்றும் பெயர் பெற்றுள்ளது முந்திரி. பகோடா, மிக்சர், இனிப்புகள் போன்ற உணவுகளுக்குச் சுவைகூட்டும் முந்திரிக்கு, இப்படியெல்லாம் அடிப் படை இருப்பது ஆச்சர்யம்தான்!

- கே.ஜெ.ஷிஃபானா அஃப்ஸின்,
உ. எண் 913,
கூத்தாநல்லூர்





துளையிட்ட

இந்தியாவின் வட கிழக்கில் அமைந்துள்ள கடைக்கோடி மாநிலம் நாகாலாந்து. மயன்மார், அருணாசலப் பிரதேசம், மணிப்பூர் அஸ்ஸாம் ஆகியவை, இதைச் சுற்றிலும் அமைந்துள்ளன. அங்கமிநாகா, ஓ. சாகேசாங், சங், சுமி, லோதா என 14 வகையான பிரதான பழங்குடி இனத்தவர் நாகாலாந்தின் பூர்வகுடியினர். தலைநகர் கொஹிமா. மாநிலத்தின் மிகப் பெரிய நகரம் திம்மாபூர். சுமார் 16 ஆயிரத்து 600 ச.கி.மீ. பரப்பளவு கொண்ட இதன் மக்கள் தொகை சுமார் இருபது லட்சம். இந்தியாவின் மிகச் சிறிய மாநிலங்களில் இதுவும் ஒன்று.

காது துளை அடையாளம்

பர்மிய மொழியில் 'நாகா' என்றால் 'துளையிட்ட காதுகளைக் கொண்ட மக்கள்' என்று பொருள். நாகா பழங்குடி மக்களுக்கும், பர்மா மற்றும் அஸ்ஸாமில் வாழ்ந்த பழங்குடி மக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்து வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். 1816ல், பர்மிய ஆட்சியாளர்கள் படை எடுத்தபோது நாகா மக்கள் வசித்த பகுதியும் அதனையடுத்து அமைந்திருந்த அஸ்ஸாம் பகுதியும் பர்மாவின் கட்டுப்பாட்



...க்குள் வந்தன. 1826ல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி அஸ்ஸாமைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, நாகலாந்தின் சிறு பகுதியைத் தவிர மற்ற பகுதிகள் ஆங்கிலேயர்களின் வசமானது.

பர்மிய படை எடுப்புக்கு முந்தைய காலகட்டத்தில், நாகா பழங்குடி மக்களில் பலரும் கிறிஸ்துவ மதத்துக்கு மாறி விட்டார்கள். அது குறித்தோ அல்லது அதற்கு முந்தைய நாகா மக்களின் வரலாறு குறித்தோ அதிகம் தகவல்கள் இல்லை.

காதுகள்!

தனி மாநில போராட்டம்

முதல் உலகப் போரின்போது பிரிட்டிஷ் அரசாங்கம் பல நூறு நாகா பழங்குடியினரைத் தேர்ந்தெடுத்து பிரிட்டிஷ் ராணுவத்துக்கு உதவியாக வேலை செய்ய ஃபிரான்சுக்கு அனுப்பி வைத்தது. அங்கு போர் முனையில் பணியாற்றியபோது நாகா இனத்தவர்களுக்கு ஒரு சிந்தனை எழுந்தது. உலக நாடுகள் இரண்டு அணிகளாகத் திரண்டு தங்கள் கூட்டணியில் உள்ள நாடுகளுக்காக ஒற்றுமையுடன் போரிடுகின்றனரே... நாகா பழங்குடியினர் மட்டும் ஏன் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து கிடக்க வேண்டும்? என்று நினைத்தார்கள். போர் முடிந்து ஊர் திரும்பியதும், 1918ல், நாகா இன மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டும் முயற்சியில் இறங்கினார்கள். இப்படித்தான் நாகா தேசிய இயக்கம் பிறந்தது.



1947ல், இந்தியா சுதந்திரம் அடைந்த சமயத்தில் நாகா இன மக்கள் வாழ்ந்த பகுதியும் அஸ்ஸாம் மாநிலத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது.



நாகா தேசிய கவுன்சில் தங்களுக்கென்று தனி மாநிலம் வேண்டும் என்று போராட்டம் ஆரம்பித்தது. அதன் விளைவாக, 1963ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தேதி நாகாலந்து உருவானது.

தொடர்ந்தது கிளர்ச்சி!

நாகாலந்து தனி மாநிலமான பிறகும் அங்கே முழுமையான அமைதி திரும்பவில்லை. அமைதிப் பேச்சுவார்த்தையும், மோதல்களும் அவ்வப்போது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவினைவாதக் குழுக்கள் நாகாலாந்தில் இயங்கி வருகின்றன. அந்தக் குழுக்களுக்கிடையிலான மோதல்கள், சட்டம் ஒழுங்குப் பிரச்னையை ஏற்படுத்துகின்றன.

ஒண்ணே ஒண்ணு!

பதினொரு மாவட்டங்களைக் கொண்டது இந்த மாநிலம். இதன் சட்டமன்றம் 60 உறுப்பினர்களைக் கொண்டது. இங்கிருந்து பாராளுமன்

கௌதம் ராம்

நத்தின் லோக் சபாவுக்கும் ராஜ்யசபாவுக்கும் தலா ஒரு உறுப்பினர் மட்டுமே அனுப்பி வைக்கப்படுகிறார். மக்கள் தொகையில் 90 சதவிகிதம் கிறிஸ்துவர்கள்.

இங்குள்ள பல்வேறு பழங்குடி இனத்தவரும், தங்களுக்கென்று தனி மொழியினைக் கொண்டுள்ளனர். இப்படி அறுபதுக்கும் மேல் மொழிகள் இருப்பதாக மொழியியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.



1967ல், ஆங்கிலம் மாநிலத்தின் ஆட்சி மொழியானது. பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்விதான் கற்பிக்கப்படுகிறது. கல்வி அறிவு பெற்றவர்கள் 67 சதவிகிதம்.

தொழில்கள்

முக்கியத் தொழில் விவசாயம்தான். நெல், சோளம், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், புகையிலை, கரும்பு, உருளைக் கிழங்கு போன்றவை இங்கே விளைந்தாலும், மக்கள் கணிசமான அளவில் உணவுப் பொருட்களை இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து வரவழைக்க வேண்டிய அவசியம் நிலவுகிறது. மலைப்பகுதி நிலங்களில் ஏற்படும் மண் அரிப்பு பெரும் பிரச்னை. ஒரு சில பழங்குடி இனத்தவர் மலைப் பகுதிகளில் விவசாயம் செய்யும் நுட்பத்தை அறிந்துள்ளனர். காடுகளிலிருந்து கிடைக்கும் பொருட்களும் மக்களின் வாழ்க்கைக்கு வருமானம் அளிக்கின்றன. நெசவு, மண் பாண்டம் செய்தல், மர வேலை போன்றவற்றையும் மக்கள் மேற்கொள் கிறார்கள்.

13 கி.மீ. ரயில்பாதை

மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள ரயில்பாதையின் மொத்த நீளமே 13 கி.மீ. தான். ஒரே விமான நிலையம் திம்மாபூர். 'நாகாலாந்து போஸ்ட்' 'மொராங் எக்ஸ்பிரஸ்', 'நாகாலாந்து பேக்', 'ஈஸ்டர்ன் மிரர்' போன்றவை முக்கிய நாளிதழ்கள்.

விழாக்கள்!

மொழி போன்றே, பிரத்யேகமான திருவிழாக்களும் உண்டு! அங்காமி இனத்தவர் கொண்டாடுவது 'செக்ரென்யி'. 'ஓ' இனத்தினர் விதைக்கும் பருவத்தில் ஆட்டம், பாட்டத்துடன் கொண்டாடுவது 'மோஸ்ட்சு மாங்' திருவிழா. 'சக்கேசங்' இனத்தினர் ஆண்டில் ஏழு திருவிழாக்களை கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள்.

சுற்றுலா

நாகாலாந்தில் உள்ள 'ஃபகிம்' மற்றும் 'இன்டங்கி' வன விலங்கு சரணாலயங்கள் இயற்கை எழில் மிகுந்தவை. சாகசச் சுற்றுலாக்களுக்கு ஏற்ற பல இடங்கள் இங்குள்ளன. மூங்கிலில் செய்யப்பட்ட கலைப் பொருட்கள் நாகாலாந்தின் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டுபவை. ●



மணக்கும் கதம்பம்!

லட்டு விநாயகர்

ஆசிரியர் : என்.ஸ்ரீதரன், வெளியீடு : கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17. விலை ரூ.55/-

குழந்தைகளுக்கான கதைகள் எழுதுவது என்பது தனிக் கலை. அவர்களின் உலகத்தில் மரங்கள் பேசும்; பூச்சிகள், ஊர்வன, பறவைகள், விலங்குகள், மேகம் என அனைத்தும் பேசும். அவை என்ன பேசலாம்; எப்படிப் பேசலாம் எனப்தில்தான் ஆசிரியரின் திறமை வெளிப்படும். இந்தக் கதைகளிலும் ஆசிரியர் பேசுகிறார். பச் சோந்தி, நிறம் மாறும் வரம் பெற்ற கதையைச் சொல்கிறார். அதோடு, உலகில் 89 வகையான பச் சோந்திகள் உள்ளன. அதுபோல குணம் மாறும் மனிதர்கள் தொண்ணூறாவது இனம் என்றும் போகிற போக்கில் சொல்கிறார். ஒவ்வொரு கதையும் சூட்சு மமாக ஒரு அறிவுரையைக் கொண்டிருக்கிறது.



வந்தே மாதரம் முதலான கதைகள்

ஆசிரியர் : ஜானகி மணாளன். வெளியீடு : திருவரசு புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை - 17. விலை ரூ.35/-

கதை என்று சொன்னாலும், அழகான சிறிய சம்பவங் களை, செய்திகளைக் கொண்ட கட்டுரைத் தொகுப்பு. மொத்தம் பதினான்கு கட்டுரைகள். குறிஞ்சி மலர் கொடைக்கானல் பகுதியில் பூக்கும் அரிய மலர். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் என்பது நாம் அறிந்த விஷயம். அதை உலகறியச் செய்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த தாவரவியல் அறிஞர் ராபர்ட் ஒயிட். இதில் 150 வகைகள் உண்டு. இப்படி கருத்துச் செறிவான பதினான்கு கட்டுரைகள். குடியரசுத் தலைவர், பிரதமர், தேசியக் கொடி, ஒலிம்பிக், மிக்கி மௌஸ்.. என்று பலரும் அறிந்தவை பற்றிய, அரிய விஷயங்கள் மணக்கும் கதம்பம்

- ராகுல்





பூப்பூவாப் பூத்திருக்கு!

மேலிருந்து கீழ்

1. அந்தி மந்தி தாரைப்பூ! (7)
2. சந்தோஷ மலர் (5)
3. தேவலோக மலர் (பாமாவிற்காக கிருஷ்ணன் கொண்டு வந்தது) (5)
4. வாசனை மூக்கைப் பிச்சிக்கிட்டுப் போகும் (5)
5. பிரபல தமிழ் வார இதழ் (4)
6. வேலியோரச் செடிப்பூ; சிவனுக்கு சிறந்தது (4)
7. குற்றால மலையில் மணம் பரப்புவது (6)

கீழிருந்து மேல்

8. இந்தியாவின் தேசிய மலர் (3)
9. மார்கழி மாதம். வீட்டுவாசல் கோல சாணிப் பிள்ளையார் தலையில் இது (3)
10. இரு பூக்களுக்கிடையில் வரமும் ரசமும் பின்னிக் கிடக்கிறது (6)
11. மனித இனத்தில் மலிந்து கிடக்கும் ஒரு பிரச்னையை இம்மலர் பெயரிலேயே வைத்திருக்கிறது (5)
12. கதிரவன் முகம் கண்டு களிக்குமாம் (6)
13. எந்த வாசனையை நினைத்து இம்மலரை முகர்ந்து பார்க்கிறோமோ அந்த மணத்தை இம்மலர் தருமாம் (7)
14. நிலத்தளவே ஆகுமாம் 'நீர்............' என்கிறார் வள்ளுவர் (4)



இடமிருந்து வலம்

15. சாமப் பொழுதும் அந்திப் பொழுதும் சந்திக்கின்றது (4)

16. நேருஜி நெஞ்சில் (2)

17. மிருதுவான இட்லியை இம்மலருடன் ஒப்பிடுவதுண்டு (4)

18. ச்சே. ரொம்ப மோசம். இந்தப் பூ பொய் சொன்னதாக புராணக் கதையுண்டு (4)

19. இம்மலர்க் கொடிக்கு பாரி தேர் தந்தானாம் (3)

20.வாச மில்லா மலரிது (7)

வலமிருந்து இடம்

7 சப்பாத்திப் பூ என்றொரு பேரும் உண்டு (6)

14. 'ஆரவாரத்தில்' மலருண்டு (4)

21. இதன் விதை விஷத்தன்மை கொண்டது (5)

- அருணா எஸ்.சண்முகம்



விடை கள் :

மேலிருந்து கீழ்: 1. அந்தி மந்தாரை, 2.மகிழம்பூ, 3. பாரிஜாதம், 4.பிச்சி, 5.குமுதம், 6.ஊமத்தை, 7.செண்பகப்பூ **கீழிருந்து மேல்:** 5.குறிஞ்சி, 8.தாமரை, 9.பூசணி, 10.பூவரசம் பூ, 11.ஜாதிமல்லி, 12.சூரிய காந்தி, 13.மனோரஞ்சிதம், 14.ஆம்பல் **இடமிருந்து வலம்:** 15.சாமந்தி, 16.ரோஜா, 17.மல்லிகை, 18.தாழம்பூ, 19.முல்லை, 20.கனகாம்பரம் **வலமிருந்து இடம்:** 7.செம்பருத்தி, 14.ஆவாரம், 21.அரளிப் பூ

"எங்கே பராக்குப் பார்த்துக் கொண்டே தப்புத் தப்பா லெப்ட் ரைட் போடுறே, மாரிமுத்து?'' டிரில் மாஸ்டர் வீரய்யாவின் கர்ஜனை கேட்டுத் திடுக் கிட்டான் மாரிமுத்து. பி.டி. கிளாஸ் என் றாலே பையன்களுக்கு வயிற்றில் புளி யைக் கரைக்கும். பி.டி. வாத்தியார் வீரய் யாவின் உருவம் அப்படி. மிலிட்டரி யிலிருந்து வந்தவர். ஆஜானுபாகுவாக உருண்டு திரண்ட, உயரமான உடம்பு. பேச்சு, பார்வை, நடை அனைத்திலும் திட்டவட்டமான போக்கு இருக்கும் அவருக்கு.

கருமேகமாய் இருட்டிக் கொண்டு வருகிற வானத்தைப் பார்த்து, 'ஸ்கூல் முடிந்து வீடு திரும்பும் முன் மழை வலுத்து விடுமோ?' என்ற கவலையில் இருந்த மாரிமுத்துவை அதட்டினார் அவர். ''வா, இங்கே, மாரிமுத்து கையை நீட்டு! சும்மா வானத்தை வானத்தையே பார்த்துக்கிட்டு, மார்ச் பாஸ்டில் கவனமே இல்லாமல் என்னடா?'' வீரய்யாவின்

பலாப்

நெ. சண்முக வேலாயுதம்



கையிலிருந்து மேலே உயர்ந்த பிரம்பு, மாரி முத்துவின் நீட்டிய உள்ளங் கைகளைப் பார்த்த உடன், கீழே இறங் காமல் மேலேயே நின்றது.' 'என்னடா, காய்ப்புக் காய்ப்பாய் கை பூராவும்...'' மாரிமுத்துவின் உள்ளங்கைகளைப் பிடித்துத் தொட்டுப் பார்த்தார்.

''விறகு வெட்டுனதிலே காய்ச்சுப் போச்சு சார்!'' வார்த்தைகளை விழுங்கி விழுங்கிப் பேசிய மாரிமுத் துவை உற்றுப் பார்த்தார்.

''விறகு வெட்டி

பழம்!



னியா, ஏண்டா?''

''ராத்திரி அம்மா கஞ்சி காய்ச்ச, பெரிய பெரிய முண்டு விறகுகளை வெட்டிச் சின்னச் சின்ன துண்டாக்குவேன் சார்!''

''இப்போ மழை வரும்போல இருக்கு சார்! விறகெல்லாம் நனைஞ்சி ஈரமாயிடுமோன்னு...'' மாரிமுத்து பாதியிலேயே நிறுத்தினான்.

''உன் வீடு, எங்கேடா இருக்கு?'' வாத்தியார்.

''கிழக்கால, எருமைப்பட்டி சார்.''

''எருமைப் பட்டியா?, அது அஞ்சு மைல் இருக்குமேடா? எப்படிடா ஸ்கூ லுக்கு வந்து போறே?''



''நடந்துதான் சார்!''

''நடந்தா! தினமும் அஞ்சும் அஞ்சும் பத்து மைல் நடக்கிறயா? அப்புறம் வெறகு வெட்டற வேலை வேற.......''

மாரிமுத்துவின் மௌனம் பரி தாபமாயிருந்தது. அவன் கவலையும் பயமுமாக வாத்தியாரையே பார்த் தவாறு நின்றான்.

''உனக்குப் பி.டி. கிளாசெல் லாம் தேவையேயில்லைடா! சும்மா எப்பவும் அசையாம டீ.வி. பெட்டிக்கு முன்னே ஏதேனும் கொரிச்சுக்கிட்டே உக்காந்திருக்கிற மத்த பசங் களுக்குத்தான் அதெல்லாம் அவசியம். நீ கிளம்புடா, மாரிமுத்து! மழை பெரிசா வரதுக்குள்ளாற, நீ வீட்டுக் குப் புறப்படுடா.''

வீரய்யா வாத்தியார் அவன் தோள் களைப் பிடித்து மெல்லத் தள்ளிவிட்டார்.

காலையில் ஸ்கூலுக்கு வரும்போது தள்ளுவண்டியில் வைத்து விற்று வந்த பலாப் பழத்தின் ஞாபகம் வந்தது, மாரி முத்துவுக்கு. 'வெளியே முள்ளு முள் ளாய், கரடு முரடான தோல்! ஆனால் உள்ளே தேன் தேனாய் இனிக்கும் சுளை கள்! வீரய்யா வாத்தியார் ஒரு பலாப் பழமோ?' சிந்தனை ஓட்டத்துடன் பாடப் புத்தகப் பையையும், சோற்றுத் தூக்குச் சட்டியையும் நோக்கி ஓடினான், மாரிமுத்து.

●

விண்வெளி அன்னம்

நிலா இல்லாத வானத்துல அழகு இல்லைதான். ஆனா, வீனஸ் என்னும் வெள்ளி கிரகத்துக்கும், புதன் கிரகத் துக்கும் நிலாவே கிடையாது. பூமிக்கு ஒரு நிலா; செவ்வாய்க்கு இரண்டு; நெப்டியூனுக்கு 13, யுரேனஸ் கிரகத்துக்கு 27; சனிக்கு 30; ஜூபிடர் என்கிற வியாழனுக்கு 63 என்று நிலாக்கள். 'சே! அழகுக்கு அடையாளமாக சொல்லப் படற வீனஸுக்கு நிலா இல்லேன்னா வருத்தமாத்தான் இருக்கு. அப்ப, 'நிலாவே வா'ன்னு வீனஸ் சோகமாய்ப் பாடுமோ?


அன்னக் கூட்டம்

வானத்தில் அன்னப் பறவையா? விண்வெளியில் வட பகுதியில் அமைந்திருக்கும் நட்சத்திரத் தொகுதி 'சிக்னஸ்' (cygnus) எனப்படுகிறது.

✦சிக்னஸ்



✦ஜூபிடர்



முனைவர் ஆசுரா

வடசிலுவை (northern cross) எனவும் குறிப்பிடுகின்றனர். இதில் மொத்தம் 88 நட்சத் திரத் தொகுதிகள் உள்ளன. அதில் ஒன்றுதான் 'சிக்னஸ்'. கிரேக்க மொழியில் இதற்கு 'அன்னம்' எனப் பொருள். இதில் ஒன்பது நட்சத்திரங்கள் உள்ளன. சிக்னஸில் உள்ள மிகப் பிரகாசமான நட்சத்திரம் டெனிப் (Deb Neb). இது சூரியனைவிட சுமார் 60,000 மடங்கு பிரகாச மானதாம். அட, ஆச்சரிய மான அன்னப் பறவை!

450 கோடி ஆண்டுகள்

‘‘பல்லாண்டு, பல்லாண்டு பல கோடி நூறாண்டுகள் வாழ்க!'' சூரியனுக்குப் பொருத்தமான வாழ்த்து இது! 450 கோடி ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருப்பது நம் சூரியன். இதனுடைய மொத்த ஆயுட்காலம் சுமார் 1000 கோடி ஆண்டுகள் என்கிறார்கள்.



வாயுப் பொருள்களால் ஆன சூரியன், நெருப்புக் கோளம். நிறம், வெள்ளை. ஆனால், பூமியின் மேற்பரப்பிலிருந்து பார்க்கின்றபோது, இது மஞ்சளாகத் தெரிகிறதாம். இதில் ஹைட்ரஜன் 73.46 சதவிகிதம், ஹீலியம் 24.85 சதவிகிதம் உள்ளன. இவை தவிர ஆக்சிஜன், கார்பன், இரும்பு, சல்பர், நியான், நைட்ரஜன், சிலிகான், மக்னீஷியம் போன்ற தனிமங்களும் காணப் படுகின்றன. பூமியிலிருந்து 150 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அவ்வளவு தூரத்தில் இருக்கும்போதே இந்தச் சூடு சுடுதே! அப்ப, வயசானாலும், இளஞ்சூரியன் தான்!



இறங்குவது எங்கே?

ஜூபிடர் கோளில் விண்கலன்கள் இறங்கும் வகையிலான தரை போன்ற மேற்பரப்பு இல்லையாம். இது வாயுக்களால் சூழப்பட்டுள்ள கோள். இதைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோதே 'பெரிய வாயுப்பந்து' (gas giant) என்கிறார்கள். இதன் சுற்றுப் புறத்தில் சுமார் 75 சதவிகிதம் ஹைடிரஜன், 24 சதவிகிதம் ஹீலியம் காணப்படுகின்றன. தவிர மீத்தேன், அமோனியம், ஈத்தேன், நீர், ஹைடிரஜன் டியூட்ரைட் போன்றவையும் காணப்படுகின்றன. தமிழில் வியாழன் என அழைக்கப்படும் இந்தக் கோள், சூரியனிலிருந்து 77,28,00,000 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது. பூமியைவிட 11 மடங்கு பெரியது. சரி; விண்கலனில் போனா எங்கே தரை இறங்குவது?

✱ சனியின் நிலாக்கள்





வெற்றி வளர...!

அழகிய மயிலே அழகிய மயிலே
ஆடலை எங்கே கற்றாய் நீ?
பழகிய இடத்தை எனக்கும்சொன்னால்
பழகிக் கொள்வேன்; கற்பிப்பேன்!

பச்சைக் கிளியே பச்சைக்கிளியே
பண்புப் பேச்சை பழக்கியதார்?
அச்சம் இன்றி அவர் பேர் சொன்னால்
அவரிடம் நானும் பயில்வேனே!

உணவைக் கண்டதும் உரத்துப்பாடும்
உயர்குணம் கொண்ட காக்கைகளே!
குணத்தைப் பற்றி பாடம் நடத்தும்
குருவின் வீட்டைக் காட்டுங்களேன்.

கருமைக் குயிலே, கருமைக் குயிலே
அருமை அருமை உன் கீதம்!
திறமை இதனை ஒளிரச் செய்த
தீரனை அறிமுகம் செய்யுங்களேன்.

வாலைக் குழைத்தும் மெல்லக்
குரைத்தும்
உரிமை உணர்த்தும் நாய்க்குட்டியே!
நூலைப் படித்தும் அறியா நன்றியை
நீயும் பயின்றது யாரிடமோ?

உயிரை உணர்த்திடும் அன்னைக்
குரலினை
உணர்ந்தது எவ்விதம் பசுங்கன்றே?
வயிற்றில் இருந்ததை நினைக்கும்
வரையினில்
வாழ்வினில் வெற்றி வருமன்றோ?

- நித்யபாலாஜி,
சென்னை



மீனாட்டம்

குளத்தினிலே கூட்டமாய்
கொழுத்தமீன்கள்
ஆட்டமாம்.
சலசலக்கும் நீரிலே
வாத்துகளின் நீச்சலாம்.

பொரியைக் கொஞ்சம் தூவினால்
பாய்ந்து வரும் வேகமாய்.
பளபளக்கும் உடலின்மேல்
பரிதியொளி மின்னுமாம்.

பாசியோடு அழுக்குகள்
பரவிடாத வண்ணமாய்
நீரைக் காக்க உயிர்த்திடும்
நல்ல நண்பன் மீன்களாம்.

மீசை வளர்த்த கெண்டைகள்
மேலெழுந்து தாவுமே!
ஆசையாகப் பிள்ளைகள்
அதனைப் பார்த்துக் கூவுவர்.

மயிலை உறையும் ஈசனின்
திருக்குளத்தைப் பாருங்கள்
உயிரை அள்ளும் துள்ளலை
உள்ளம் குளிரக் காணுங்கள்!

- கன்னிக்கோவில் ராஜா



பொன்காப்பு!

மரமே மரமே நிழல்
தருவாய்
மகிழ்ந்து உண்ணக்
கனி தருவாய்
பறவைகளின்
புகலிடமே
குருவிகளின்
வசிப்பிடமே

இயற்கை அழகின் நிகர்நீயே
மலையின் அழகு சீதனமாம்!
வெயிலில் வாடி வதங்குகிறாய்
புயலில் ஆடி அலறுகிறாய்

செழிக்க மழையைத் தருகின்றாய்
மழையால் நீயும் செழிக்கின்றாய்
நாங்கள் உன்னை வெட்டுகிறோம்
வீட்டின் கதவாய்ப் பூட்டுகிறோம்!

அறியாமையினால் செய்திட்டோம்
அழிவு என்னும் பொல்லாப்பு!
எனினும் நீயே மண்காப்பு!
எங்கள் வாழ்வின் பொன்காப்பு!

- கோடாவிளை த.அருள்






பென்சில் மரம்!

''நான்தான் ஜன்னல்கிட்டே உட்காருவேன்...'' ரயிலுக்குக் கிளம்பும்போதே சொல்ல ஆரம்பித்துவிட்டான் மிதுன். ஐந்து வயதுச் சிறுவன். அவன் விரும்பியபடியே ஜன்னலோரமாக உட்கார வைத்தாள் செல்வி. உற்சாகக் குரலுடன் புறப்பட்ட ரயில் வேகமெடுத்தது. வெளியே பார்த்துக்கொண்டே வந்தான் மிதுன். ஏரிகள், வயல்வெளிகள், பறவைகள், விலங்குகள்... எல்லாமே அவனை வசீகரப் படுத்தின.

அவன் கேட்கக் கேட்கச் சலிக்காமல் பதில் சொன்னாள் செல்வி. 'குழந்தைகளின் கேள்விதான், அவற்றின் வளர்ச்சி!' என்று புரிந்தவள். அப்போது அவன் கேட்டான். ''அது என்ன மரம்?'' செல்வி அவன் காட்டிய திசையைப் பார்த்தாள்.

அங்கே ரப்பர் மரங்கள் அடர்ந்திருந்தன. அவற்றின் தண்டுப் பகுதியில் சிறிது வெட்டி, அதில் வழியும் பாலைச் சேகரிக்க குவளை கட்டியிருந்தார்கள். 'அதுதான் ரப்பர் மரம்' என்ற செல்வி, அவனுக்குப் புரியும் விதமாக, ''நீ வைச்சிருக்க இல்லே எரேசர் (eraser) அதை இதுல இருந்துதான் தயாரிக்கிறாங்க,'' என்றாள்.

'புரிந்தது' என்பது போலத் தலையசைத்த மிதுன், சிறிது மௌனத்துக்குப் பின் கேட்டான்: ''பென்சில் மரம் வரும்போது எனக்குக் காட்டறியாம்மா?'' செல்வி திகைத்தாள். குழந்தைக்குச் சொல்லித் தரும் முன், தான் தெரிந்து கொள்ள வேண்டியது அதிகம் என்பது புரிந்தது அவளுக்கு!



வீரசிகாமணி ஆதினமிளகி



உள்ளம் தொட்ட போதனை!



✱ 'உள்ளம் தொடும் போதனை!' எனும் தலைப்பில் வெளியான கவிதைப் பூங்கா உண்மையிலே உள்ளம் தொட்டது. பாராட்டுகள். - **இ.டி.ஹேமமாலினி, சென்னை** ✱ செல்லப் பிராணிகளிடம் அன்பு காட்டும் அதே சமயத்தில், ஆரோக்கியத்தில் கவனமுடன் இருத்தல் அவசியம் என்று, என் செல்லம் தொகுப்பு புரிய வைத்த விதம் சிறப்பு. - **ஆர்.ஜி.ஜே.ஜெய் ஹரிதா, திசையன்விளை** ✱ கடந்த இதழில் சம்பவம் பகுதியில் எழுதப்பட்ட மூதறிஞர் ராஜாஜி நம்பிக்கை குட்டிக் கதையும் தேசப்பிதா காந்திஜியின் குட்டிக் கதையும், சுவாமி விவேகானந்தரின் 'மனிதன்' குட்டி கதையும் அருமை - அற்புதம் - ஆனந்தம்! - **ம.பாரதி, சென்னை** ✱ அறிவைப் பெருக்கி, கல்விச் செல்வத்தை ஊட்டி வளர்க்கும் கண்கண்ட கடவுள் ஆசிரியப் பெருந்தலையின் அருமை பெருமையைப் புலப்படுத்திச் சிறந்து மிளிர்கிறது. ஆசிரியரது அற்புதத் தலையங்கம்! - **இனாம் ச.ஆதிகேசவன், குருமலை.** ✱ 'உண்மைக்குப் பரிசு' சிறு கதை இலக்கியவளத்தையும் சத்திய வளத்தையும் அரங்கேற்றியதோடு, வாய்மை வெல்லும் என்பதை நிரூபித்தது. - **ஆர்.ஆர்.உமா செல்வமருதூர்** ✱ வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படி நடந்து கொள்ளக் கூடாது என்பதை அட்டைப் படக் கட்டுரை தெளிவாக விளக்கியது. - **ம.அக்ஷயா, உ. எண் 1346, அரூர்** ✱ அறிவியல் கதைகளின் மூலம் நிறைய விஷயங்களை அறிந்து கொள்ள முடிகிறது. அறிவியல் கதையினை படத்துடன் வெளியிட்டு, கண்டுபிடிப்பாளரையும் புகைப் படத்துடன் வெளியிடுவது கட் செய்து பைல் பண்ணுவதற்கு வசதியாக உள்ளது. - **அ.ஸ்ரீராம் விஜய், உ. எண் 1704, நாமக்கல்** ✱ 'வெளிச்ச விழுதுகள்' என்று அறிவு ஒளியும் ஞான ஒளியும் இணைந்து பிரகாசிக்க கோகூ தந்த தலையங்கம் தனிச்சிறப்பு. ஆசிரியர் தினத்தின் அடையாளமான டாக்டர் ராதாகிருஷ்ணனை நினைவுபடுத்தியதும் அபாரம்! - **ஆர்.ஜி.சரஸ்வதி, திசையன்விளை** ✱ 36 கோட்டைகள் (இந்திய நாடு) என்ற தலைப்பிலுள்ள செய்திகளைப் படித்துப் பல பயனுள்ள செய்திகளை தெரிந்து கொண்டேன். புதிர்கள், விடுகதைகள் அனைத்தும் அருமை. - **அ.அருண் பாலாஜி, உ. எண் 1651, கும்பகோணம்** ✱ கோகுலம் செப்டெம்பர் இதழில் சம்பவம் பகுதியில் இடம் பெற்ற நம்பிக்கைத் தகவல்கள் என்னை வெகுவாகக் கவர்ந்தன. - **டி.எம்.சிவரஞ்சனி, உ. எண் 179, திருவாரூர்**

பெயரைச் சொல்; பரிசை வெல் - 7







1.______________ 2.____________________ 3.________________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....

வீட்டு முகவரி : ....

.... பின்கோடு ....

போட்டி பரிசு ரூ.1000/-

கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனித்துப் பாருங்கள். இவை தொடர்பான செய்திகளும், இவற்றுக்கான வேறு படங்களும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம், இங்கே தரப்பட்டுள்ள படங்களின் பெயர் என்ன என்று கண்டுபிடித்து, கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்திரித்து அனுப்புங்கள். சரியான விடைகள் எழுதுவோரில், பத்து பேருக்குக் குலுக்கல் முறையில் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதி. முடிவு தேதி : 30.10.2010



அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1801

1802

1803

1804

1805

1806

1807

1808

1809

1810

1811

1812

1813

1814

1815

1816

1817

1818

1819

1820

1821

1822

1823

1824

1825

ர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

